24th March 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 24 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com

## குவைத்தில் பிரவேசிக்க ரஞ்சனுக்கு மறுப்பு



பிரபல கலைஞரும் முன்னால் அமைச்சருமான ரஞ்சன் ராமநாயக்கவுக்கு குவைத்திற்கு பிரவேசிப்பதற்கு அனுமதி

02ம் பக்கம்பார்க்க...

### சர்ச்சை கருத்து

# மைத்திரி நாளை சி.ஐ.டி.யில் ஆஜர்



மைத்திரியை கைது செய்யுமாறு பல தரப்பிலிருந்தும் வேண்டுகோள்

தனக்கும், குடும்பத்துக்கும் பாதுகாப்பு கோரும் மைத்திரி

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவில் விசாரிக்கப்படவுள்ளார்.

இந்த கருத்து தொடர்பில் அவரிடம் சி ஐ டி யினர் நாளை திங்கட்கிழமை வாக்குமூலம் பெறவுள்ளதாக பொலிஸ் மா அதிபர்

02ம் பக்கம்பார்க்க...

## இஸ்ரேலில் இலங்கை துணை தூதரகம் திறப்பு

### பலஸ்தீன் ஒருமைப்பாட்டு இயக்கம் கடும் கண்டனம்

காசாவில் இனப்படுகொலை மேற்கொண்டுள்ள இஸ்ரேலில் இலங்கை அதன் துணை

02ம் பக்கம்பார்க்க...

## முஸ்லிம்களின் உரிமைகள் விடயத்தில் கவனம் செலுத்துங்கள்

### கனடா வாழ் முஸ்லிம்கள் அனுரவுக்கு கடிதம்



கனடா வாழ் இலங்கை முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரா குமார திஸாநாயக்காவை சந்தித்த சந்தர்ப்பத்தில் கையளித்த

12ம் பக்கம்பார்க்க...

## விமல் தலைமையில் புதிய கூட்டணி?



1977 ன் தோல்வியடைந்த பொருளாதார முறைக்கு முற்றுப் புள்ளி வைப்போம் என்ற தொனியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த




02ம் பக்கம்பார்க்க...

## விமரிசையாக கொண்டாடப்பட்ட பாகிஸ்தான் சுதந்திர தினம்

(அஷ்ரப் ஏ சமத்)

பாகிஸ்தானின் தேசிய தினத்தை குறிக்கும் நிகழ்வு 23 மார்ச் 2024 கொழும்பில் உள்ள பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர் ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

02ம் பக்கம்பார்க்க...



## பணிப்பாளர் பதவியிலிருந்து விலகும் பைஷல் ஆப்தீன்

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் தலைமை பதவியில் விரைவில் மாற்றம் ஏற்படவுள்ளது.தற்போது பணிப்பாளராக இருக்கும் பைசல்

02ம் பக்கம்பார்க்க...

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## இஸ்ரேலில்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

தூதரகம் ஒன்றை திறந்திருப்பது குறித்து இலங்கை பலஸ்தீன ஒருமைப்பாட்டு இயக்கம் வன்மையாக கண்டித்துள்ளது.இது குறித்து இலங்கை பலஸ்தீன ஒருமைப்பாட்டு இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது

பலஸ்தீனின் ஒருமைப்பாட்டுக்கான இலங்கைக் குழு வடக்கு இஸ்ரேலில் உள்ள ஹைஃபா நகரில் இலங்கையின்துணைத் தூதரக அலுவலகம் அமைப்பது குறித்து தனது ஆழ்ந்த ஏமாற்றத்தையும் கவலையையும் வெளிப்படுத்தியுள்ளது

உலகளாவிய நீதி மற்றும் காலனித்துவ நுகத்தடியிலிருந்து சுதந்திரத்தை ஊக்குவிப்பதில் இலங்கையின் சாதனையைப் பொறுத்தவரையில், இலங்கை அரசாங்கத்திடமிருந்து இராஜதந்திர விலகல் எதிர்பார்க்கப்படும் நிலைப்பாடாக இருக்கும் வேளையில், காசா பகுதியில் இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டு வருகிற வேளை இலங்கை அரசாங்கத்தின் இந்த செயற்பாட்டு அதனுடனான உறவுகளை வலுப்படுத்துவதாக அமைகின்றது.

மேலும், டெல் அவிவ் நகரில் இலங்கை தூதரகம் இருக்கும் நேரத்தில், இஸ்ரேல் ஒரு சிறிய நாடாக இருப்பதால், ஹைபா நகரில் துணைத் தூதரக அலுவலகத்தை திறக்க வேண்டிய அவசியமில்லை.

இஸ்ரேலிய படைகளால் .32,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ள காசா பகுதியில் மக்களுக்கு நிவாரண உதவிகள் மற்றும் உணவு உதவிகளை வழங்க நிதி திரட்டும் நடவடிக்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஈடுபட்டு வருகிற நிலையில் இலங்கை துணைத் தூதரக ஹைபாவில் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் இராணுவத்தின் தரைவழி இராணுவ நடவடிக்கைகளால் காசாவில் மோசமான பட்டினி நிலை உருவாகியுள்ளதுடன் மற்றும் மனிதாபிமான நெருக்கடியின் இலங்கை அரசாங்கம் இது தொடர்பில் அசமந்தப் போக்குடன் நடந்து வருகின்றது.

எனவே, மேற்கு ஆசியாவில் அமைதியை வளர்ப்பதில் உறுதிபூண்டுள்ள ஒரு தன்னார்வ அமைப்பாக, அரசாங்கத்தின் செயல்பாடுகளை இஸ்ரேலுக்கு நன்மை அளிக்கும் நடவடிக்கையாக நாங்கள் கருதுகிறோம், சர்வதேச சட்டத்தையும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களையும் தண்டனையின்றி வெட்கமின்றி மீறும் ஓர் சர்வதேச புறக்கணிப்பாகும்.

வரலாற்றின் வலது பக்கத்துடன் தன்னை இணைத்துக் கொள்ளுமாறும், உலக அமைதித் தொகுதியின் உணர்வுகளை மட்டுமல்ல, ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பிரதேசங்களில் தாக்கப்பட்ட மக்களையும் புண்படுத்தும் செயல்களில் இருந்து விலகி இருக்குமாறு நாங்கள் அரசாங்கத்தை கடுமையாக வலியுறுத்துகிறோம்.

## விமல்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பேரணியில் முக்கிய எதிர்க் கட்சி பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

விமல் வீரவங்ச,உதய கம்மன்பில, தயாஸிறி ஜயசேகர, டளஸ் அழகப்பெரும, ரொஷான் ரணசிங்க உட்பட மேலும் பல எதிர்க்கட்சி பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டனர்.


**அசுர வேகத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் உதயம் பத்திரிகையில் உங்களது நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு:**

075 5 840830


## மைத்திரியின்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி பற்றிய தனக்கு தெரியமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த தகவல் நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மைத்திரிபால சிறிசேன தெரிவித்த தகவல் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என கட்சி இன மத பேதமின்றி அரசியல்வாதிகளும் மற்றும் பிரமுகர்களும் கருத்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.சட்டம் ஒழுங்கமைச்சர் டிரான் அலஸ் இது குறித்து உடன் விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேநேரம் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய , ஐக்கிய மக்கள் சக்தியின் கிறிஸ்தவ அமைப்பு சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தலைமையிலான குழுவும் மற்றும் கத்தோலிக்க அமைப்புகளும் மைத்திரிபால சிறிசேனவை உடன் கைது செய்து விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச்செயலாளருமான முஜிபுர் ரஹ்மான் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பல தடவை நீதிமன்றம் சென்ற மைத்திரிபால சிறிசேன ஈஸ்டர் குற்றவாளிகளை சட்டத்தின் தண்டனையில் இருந்து தப்பிக்க உதவி புரிந்துள்ளார். இது தேஷ த்துரோக குற்றமாகும் அவரை குற்றவியல் சட்டத்தில் கைது செய்து நீதிமன்றில் முன்னிறுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

## பணிப்பாளர்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆப்தீன் அவர்கள் இப்பதவியிலிருந்து விலகவுள்ளார்.இதன்படி தற்போது புதிய ஒருவரை நியமிப்பதற்கு சமய விவகார அமைச்சு பரிசீலித்து வருகின்றது.அண்மையில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை உயர் அதிகாரிகளுக்கான போட்டிப் பரீட்சையில் தெரிவான 49 பேரில் ஒருவராக அல்ஹாஜ் பைசல் இடம்பெற்றுள்ளார்.இதன்படி இவருக்கு இவருடைய தகைமைப் படி முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தில் தொடர்ந்து பணியாற்ற முடியாது.அவர் இதனை விட தரம் கூடிய ஒரு அரச நிறுவனத்திலே பணிபுரிய வேண்டும்.இதனால் அடுத்த சில தினங்களில் இவர் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தில் இருந்து விலகி புதியதோர் அமைச்சு அல்லது திணைக்களத்தில் பதவி பெறவுள்ளார்.இதன் காரணமாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தில் தலைமை பதவியிலே மாற்றம் ஏற்படவுள்ளது.

## குவைத்தில்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

மறுக்கப்பட்டுள்ளது.

இசைக்கச்சேரி ஒன்றில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்ற போது விமான நிலையத்தில் அவருடைய கடவுச் சீட்டு பரிசீலித்த போது அதில் இஸ்ரேலுக்கு விஜயம் செய்த முத்திரை குத்தப் பட்டி ருப்பதன் காரணமாக குவைத் அவரை அந்நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கவில்லை என ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

குவைத்திற்கு அனுமதி மறுக்கப்பட்ட பின் ரஞ்சன் ராமநாயக்க டுபாய் மற்றும் அபுதாபி ஆகிய நாடுகளில் நடைபெறுகின்ற இசைக்கச்சேரிகளில் கலந்து கொண்டுள்ளார்.இப்போது அவர் இத்தாலியில் இடம்பெறவுள்ள இசைக்கச்சேரிகளில் கலந்துக் கொள்ளவுள்ளதாகவும் அவரே தெரிவித்துள்ளார்.

## தங்க மொஹிதீன் காலமானார்



கொழும்பு மாநகர சபையின் பிரதம மதிப்பீட்டாளராக பணிபுரிந்த TPT மொஹிதீன் (தங்க மொஹிதீன்) காலமானார்.கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரியான இவர் வவுனியா மாங்குளத்தை சேர்ந்தவர்.இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் மாவனல்லையில் சாஹிறா கல்லூரியில் க.பொ.த உயர்தரப் பரீட்சை பெற்று பல்கலைக்கழகத்திற்கு பிரவேசித்தார்.கொழும்பு பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்திய வரி மதிப்பீட்டியல் பாடத்தை கற்ற முதல் அணியை சேர்ந்தவர்களில் இவரும் ஒருவராவார்.






## விமரிசையாக... (முதலாம் பக்கத் தொடரச்சி)



பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) ஃபஹீம்-உல்- அஸீஸ் அவர்கள் பாகிஸ்தானின் தேசிய கீதம் இசைக்கப்படும் போது பாகிஸ்தான் தேசிய கொடியை உயர்த்தி விழாவை ஆரம்பித்தார். இந்நிகழ்வில், பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பாகிஸ்தானின் தேசிய தினத்தை குறிக்கும் விசேட செய்திகளும் வாசிக்கப்பட்டன.

பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகர் கருத்துத்தெரிவிக்கையில், ஆகஸ்ட் 14, 1947 அன்று பாகிஸ்தான் உருவாக்கத்தின் அடிப்படையாக அமைந்த வரலாற்று சிறப்புமிக்க 1940 லாகூர் தீர்மானத்தின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 23 அன்று பாகிஸ்தானின் தேசிய தினம் கொண்டாடப்படுகிறது. முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டியதோடு தமது தாய்நாட்டின் முன்னேற்றம் மற்றும் செழிப்பு ஆகியவற்றில் மட்டுமல்லாமல், இரு நட்பு நாடுகளான பாகிஸ்தான் மற்றும் இலங்கையை மேலும் நெருக்கமாக கொண்டு வருவதிலும் பாகிஸ்தான் சமூகம் தங்கள் பங்கை திறம்பட ஆற்றுமாறும் குறிப்பிட்டார். பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் ஆழமான நட்பையும் உயர்ஸ்தானிகர் இதன் போது நினைவு கூர்ந்தார்.










www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 MARCH 24 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# பாராளுமன்ற தேர்தல் முறை மாற்றம் இப்போது தேவையானதா?

இவ்வாண்டு ஒக்டோபர் மாதத்தில் நாட்டின் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்.இதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் செயலகம் தயாராகி வருவதாக தேர்தல் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க தேர்தல் நடத்தப்படுமா? உள்ளூராட்சி தேர்தலை ஒத்தி வைத்ததை போன்று ஜனாதிபதி தேர்தலும் ஒத்தி வைக்கப்படுமா? என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் எழுப்பப்படுகின்றதனை நாளாந்தம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு ஏழு மாதங்களே உள்ளன. உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைத்ததை போன்று ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைப்பது இலகுவான காரியமாக இருக்காது. நியாயமான காரணங்களின்றி ஜனாதிபதி தேர்தல் ஒத்திவைக்கப்படுமாயின் நாட்டில் இரத்த கலறி ஏற்படலாம் என்ற அச்சமும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கிடையில் பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றங்களை கொண்டுவருவதற்கான உரிய சட்டமூலமொன்றை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது பாராளுமன்ற முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட இந்த சட்டமூலத்தின் படி 160 பேர் தேர்தல் தொகுதி அடிப்படையிலும் 65 பேர் மாகாண அல்லது தேசிய மட்ட இன விகிதாசார அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்ட உள்ளனர்.

தேசிய பட்டியல் முறையில் தற்போது 29 பேரே தெரிவு செய்யப்படுகின்றனர். புதிய முறைப்படி அது 65ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலிலுக்கு முன் இத்தேர்தல் முறையை மாற்றுவதற்கு போதிய காலம் உண்டா என்பதே கேள்வியாக உள்ளது. தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டால் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டு புதிதாக தொகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபரில் நடத்தப்பட வேண்டும்.அதற்கு முன் பாராளுமன்ற தொகுதி முறையில் சீர்திருத்தம் செய்வது சாத்தியமானதல்ல என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். புதிய தேர்தல் முறை நாட்டில் பரவலாக காணப்படும் சிறுபான்மை சமூகங்களின் நலன்களை பாதிக்காத வகையில் அமையுமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. தமிழ் முஸ்லிம் அரசியல் தலைமை குறித்து விழிப்புடன் செயற்பட வேண்டும்.எமது நாட்டின் அரசியல் தலைவர்கள் பலரும் ஒட்டுமொத்தமாக நாடு நன்மை பெறுவதனை விட தமது கட்சிக்கு வெற்றியை பெற்றுக் கொள்வதற்காக தேர்தல் சட்டங்களை மாற்றுவதற்கு முயற்சிப்பது வரலாற்று ரீதியாக இடம்பெற்று வருகின்றது. தற்போது நாட்டிலுள்ள விகிதாசார தேர்தல் முறை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவால் அறிமுகப்படுத்தப்பட்டமையானது, அவர் கட்சிக்கு சாதகமாக அமையும் என்பதனாலே.இம்முறை தேர்தல் முறையில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றமும் அவ்வாறான நோக்கத்தில் மேற்கொள்ளப்படுகின்றதா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.அவசர அவசரமாக தேர்தல் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை தவிர்த்து ஒக்டோபர் மாதம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் வெற்றி பெறும் ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் இம்மாற்றங்களை அறிமுகப்படுத்துவதே சிறந்தது.

ஜனாதிபதி தேர்தலை வெற்றிக் கொள்வதற்காக இதனை பயன்படுத்தக் கூடாது.

# சன்மார்க்க அறிஞர் அஷ்ஷேய்க் முபாரக் மதனியின் ஆதங்கத்திற்கு மதிப்பளிக்கப்படுமா?

கொடுரமாக கொலை செய்யப்படுபவர்கள் இன் படங்களை பிரசுரிப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

இரு வாரங்களுக்கு முன் பெரிய நீலாவணை பொலஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனையில் தந்தை ஒருவரால் வலது குறைந்த தனது இரு பிள்ளைகளை வெட்டி கொலை செய்த சம்பவம் நாட்டில் பரபரப்பாக பேசப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது.கல்முனை பிரதேசம் எங்கும் பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ள இச்சம்பவத்தினால் மரணமான இரு பிள்ளைகளதும் ஜனாஸா நல்லடக்கத்தில் கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய பிரபல சன்மார்க்க அறிஞர் கலாநிதி அஷ்ஷேய்க் முபாரக் மதனி அவர்கள்

கொல்லப்பட்ட இரு பிள்ளைகளினதும் புகைப்படங்கள் கொடூரமான வகையில் சமூக ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டமை தொடர்பில் கவலை தெரிவித்து கருத்து தெரிவித்துள்ளார்.

பத்திரிகை தர்மத்தை மீறி இவ்வாறு செயற்படுவது யாராக இருந்தாலும் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டும்.இலங்கை பத்திரிகை ஆணைக்குழு வகுத்துள்ள ஒழுக்கக் கோவைப் படி இவ்வாறான புகைப்படங்களை பத்திரிகைகளோ சமூக ஊடகங்களோ பிரசுரிக்கின்றமை குற்றமாகவே கருதப்படுகின்றது.கலாநிதி அஷ்ஷேய்க் முபாரக் மதனி இதனை சுட்டிக் காட்டி இருப்பது எல்லோருக்கும் ஒரு பாடமாக அமையட்டும்.இவ்வாறான புகைப்படங்களை பிரசுரிப்பதனை தவிர்ப்பது அவசியமாகும்.

கையில் ஒரு கைத்தொலைபேசி இருந்தால் தாமே ஊடகவியலாளன் என்று எண்ணிச் செயற்படும் இவ்வாறான செயற்பாடுகள் முழுமையாக தவிர்க்கப்பட வேண்டும். இறந்தவர்களது சடலங்களின் புகைப்படங்களை கொடூரமான முறையில் வெளியிடுவது தவிர்க்கப்பட வேண்டும்

இவர்களுடைய பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

# சர்வ சமயப் பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற இப்தார் நிகழ்வு








(இக்பால் அலி)

கண்டியில் சர்வ சமயப் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்ட நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்லூரியின் அபிவிருத்திக் குழு, முஸ்லிம் மஜ்லிஸ் மாணவிகள் இணைந்து நடத்திய விசேட இப்தார் நிகழ்வு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அதிபர் நதீரா இஸ்மாயீல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கண்டி கல்வி வலய அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ரஸீகா கலுப்பானகே உதவிக் கல்விப் பணிப்பாளர் பௌசுல் அமீன், கண்டி மாநகர சபையின் ஆணையாளர் இஸ்ஹான் விஜயதிலக பௌத்த, பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் எம். சி. கமால்ஹஸன் கண்டி மாநகர முன்னாள் பிரதி முதல்வர் இலாஹி ஆப்தீன், மற்றும் பௌத்த, கிறிஸ்தவ இஸ்லாமிய சமயப் பெரியார்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்,

இதன் போது கண்டி நகரிலுள்ள சிங்கள, தமிழ் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# பள்ளிவாசல்களில் கடமையாற்றும் மௌலவிமார்கள், கதீப்மார்கள், முஅத்தின்மார்கள் உட்பட ஊழியர்களுக்கும் விசேட கொடுப்பனவு வழங்குக

## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வேண்டுகோள்


முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS
MRCA/1/2/2023
2024.03.18

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பள்ளிவாசல்களில் கடமையாற்றும் மௌலவிமார்கள், கதீப்மார்கள், முஅத்தின்மார்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்குமாறு அனைத்து பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள் ஃ நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். அந்த வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வக்ப் சபையின் றுடீஃ9689ஃ2024 எனும் தீர்மானத்தின் பிரகாரம் பள்ளிவாசல்களில் கடமையாற்றும் கண்ணியமிக்க மௌலவிமார்கள், கதீப்மார்கள், முஅத்தின்மார்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர்களுக்கு புனித ரமழான் மாதத்தில் பள்ளிவாசலில் சிறந்த முறையில் மத அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்காகவும் அவர்களது பல்வேறு தேவைகளை கிரமமாக நிவர்த்தி செய்வற்காகவும் ஏற்கனவே பள்ளிவாசலினால் வழங்கப்படுகின்ற சம்பளத்திற்கு மேலதிகமாக போதுமான விசேட கொடுப்பனவை ரமழான் மாதத்தில் வழங்குமாறு வேண்டிக் கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை வகுப் சபை செயலாளர் உட்பட முஸ்லிம் திணைக்களத்தின் சகல கள உத்தியோகத்தர்களுக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஆசிரியர் இடமாற்ற பிரச்சினை:

# ஆளுநர், மாகாண கல்வி பணிப்பாளரை சந்தித்தார் ஹரீஸ் எம்.பி.



அண்மைய கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தின் காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் அபாயம் உள்ள அம்பாரை மாவட்ட பாடசாலைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் வகையிலான சந்திப்பொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ் இடையிலான சந்திப்பு அண்மையில் (21) ஆளுநர் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

இதன் போது ஆசிரியர்களின் பிரச்சினைகள், முக்கிய பாடங்களுக்கு பதிலாளின்றிய இடமாற்றம் நடைபெற்றதால் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, அம்பாரை மாவட்ட பாடசாலைகளின் உள்ள ஆளனி விடயங்கள் தொடர்பில் சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு விளக்கினார்.

அதனையடுத்து கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளரை தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குமாறும், அடுத்த வார ஆரம்பத்தில் இது தொடர்பில் எடுத்த நடவடிக்கை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

இங்கு பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் நௌபர் ஏ பாவா, கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளர் சபை உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பாடல் செயலாளருமான யூ.எல். நூருல் /ஹுதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தெமடகொட ஹைறியா பெண்கள் கல்லூரிக்கு நான்கு மாடிக்கட்டிடம்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

தெமடகொட ஹைறியா பெண்கள் கல்லூரி மாணவிகளின் வகுப்பறை பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் நான்கு மாடி கட்டிடம் ஒன்றை அமைக்க ஐக்கிய அறபு இராட்சியத்தின் ஸஹீடா பவுண்டேசனின் அனுசரணையில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் நஸீரா ஹஸனார் தலைமையில் அண்மையில் (17) இடம்பெற்றது.

கல்வி அபிவிருத்திக்கான வளங்கள் எனும் திட்டத்தின் கீழ் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நவ்சர் பௌசியின் ஏற்பாட்டில் சுமார் 11 கோடி ரூபா செலவில் தெமடகொட அல்-ஹிஜ்ரா வித்தியாலயத்தின் 40 பேர்ச்சஸ் காணியில் இவ் நான்கு மாடிக்கட்டிடம் அமைக்கப்படவுள்ளது.

இதன் போது பாடசாலை அதிபர் நஸீரா ஹஸனார் கருத்து தெரிவிக்கையில் பாடசாலையின் 142வது ஆண்டு நிறைவு நேரத்தில் இது கிடைத்துள்ளமை மகிழ்ச்சியான ஒரு விடயமாகும்

ஆயிரத்திற்கும் மேற்பட்ட கனிஸ்ட பிரிவு மாணவர்கள் இடவசதியின்றி இருந்த நிலையில் இப் புதிய கட்டிடம் அவர்களின் இடப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் அமையவுள்ளது. இதற்கு உதவிய நவ்சர் பௌசி உள்ளிட்ட அனைவருக்கும் தனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். எனக் குறிப் பிடப்பட்டிருந்தார். அத்துடன் முதற். கட்ட நிதியை காசோலையை அதிதிகள் பாட சாலை அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்ட பின்னர் அதிகளுக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம்.பௌசி கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்னாள் அமைச்சர்களுமான றிஸாத் பதியுதீன், மனோ கணேசன், ரவி கருணாநாயக்கா, திலங்க சுமதிபால, முன்னாள் கொழும்பு மேயர் அஸாத் சாலி, அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபைத் தலைவர் றிஸ்வி முப்தி, கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர், ஏனைய நலன் விரும்பிகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்கள், பாடசாலையின் பழைய மாணவிகள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# சீனன்கோட்டை அக்கர தாஅட்ட பள்ளிமாடி திறப்பு







வக்பு செய்யப்பட்ட இடங்களுக்கோ சொத்துக்களுக்கோ சொந்தக்காரன் அல்லாஹ்தான். எனவே வக்பு உடைமைகளை எவராலும் விற்க முடியாது. என்று வெலிகம கபுவத்த ரிபாயியா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபர் மௌலவி எம்.எஸ்.எம்.அப்துல்லா (ரௌலி) கூறினார்.

பேருவளை சீனன்கோட்டை, அக்கர தாஅட்ட பதினெட்டு ஏக்கர் என்ற இடத்தில் கடந்த வருடம் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசலின் 2 ஆம் மாடி அமைக்கப்பட்டு கடந்த 8-3-2024 இல் வக்பு செய்யப்படும் நிகழ்வு இடம் பெற்றது. கலீபத்துஷ் சாதுலி மௌலவி எம்.எம்.செய்னுல் ஆப்தீன் பஹ்ஜியினால் நடர்த்தப்பட்ட வக்பு நிகழ்வினைத் தொடர்ந்து, சினன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம்.முக்தார் ாஜியார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விசேட உரை நிகழ்த்தும் போதே மௌலவி அப்துல்லா் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியதாவது,

அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான இடம் பள்ளிவாசல் ஆகும். அது ஒழுக்கம் நிறைந்த இடமாகும். கண்ணியம் பேணப்படும் இடமாகவும் உள்ளது. வம்பிழக்கும் கடைத் தெருவே அல்லாஹ்வுக்கு வெறுப்பான இடம் ஆகும். தொழுகைக்காக பள்ளியை நோக்கி வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் நன்மைகள் எழுதப்படுகின்றன.

பள்ளியை கட்டிக் கொடுப்பவர்களுக்கு அல்லாஹ் சுவர்க்கத்தில் ஒரு மாளிகையைக் கொடுக்கிறான். அதேபோன்று பள்ளியை நிர்வகிப்பவர்கள் அல்லாஹ்வின் அடுத்த வீட்டுக்காரர்களாக கணிக்கப்படுகிறார்கள். அந்த அளவுக்கு அல்லாஹ் அவர்களை கண்ணியப்படுத்துகிறான். எங்களுக்குள் ஒற்றுமை நிலவ வேண்டும். அப்போது தான் அல்லாஹ்வின் உதவிகள் வந்தடையும் என்றார்.

சினன்கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினர் அஷ் செய் இஸானுத்தீன் அபுல் ஹஸன் நலீமி யின் அறிமுக உரையின் போது,

எமது விழாவில் ஒவ்வொரு விடயத்திலும் ஒவ்வொரு வரலாறு இருக்க வேண்டும். அது பின்னால் வரும் சந்ததியினருக்கு பாடமாகவும் வழிகாட்டியாகவும் அமைகிறது. அந்த வகையில் இந்த அக்கர தாஅட்ட என்ற குக்கிராமம் மர்ஹூம் ஸாலி ஹாஜியாருக்குறிய இடமாகும். அவரது குடும்ப வாரிசுகளில் ஒருவரான ஹிகம் ஹாஜியாரால் கொள்முதல் செய்யப்பட்ட சுமார் 12 1ஃ2 பேச் நிலப் பகுதியிலே கடந்த 2023-3-19 இல் பள்ளி நிர்மாணம் பெற்று வக்பு செய்யப்பட்டது. ஒரு வருடத்தில் அதன் இரண்டாம் மாடியும் நிறைவு பெற்று இன்று திறப்பு நிகழ்வும் வக்பு செய்யும் நிகழ்வும் இடம் பெற்றுள்ளது. பள்ளியினுள் பேனப்படும் தக்வா,வெளியிலும் பேணப்பட வேண்டும். அப்போதுதான் பள்ளிப் பணி நிறைவ வேற்றப்படுகிறது.

இந்நிகழ்வில் ஹிகம் ஹாஜியார் தலைமையில் 10 பேர் கொண்ட நிர்வாகக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான நியமனக் கடிதமும் கையளிக்கப்பட்டது.

பெருந்திரனான பிரதேச மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில்,சங்க இணைச் செயலாளர் எம்.எம்.சிஹாப் ாஜியார் சீனன்கோட்டை குர்ஆன் மதாரிஸ் பணிப்பாளர் மௌலவி எம்.டபிள்யூ. எம்.ப்ருத்தீன் (மிஸ்பாஹி) ஜாமிஅத்துஸ் பாஸியத்துஷ் ஷாதுலி கலாபீட முதல்வர் மௌலவி எம்.அஸ்மிகான் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். அயலிலுள்ள சிங்கள பௌத்த சகோதரர்கள் பலரும் பள்ளி நிகழ்வில் வருகை தந்து ஒத்துழைப்புத் தந்த நிகழ்வும் சிறப்புடன் பெறுகிறது.

## சீனன்கோட்டையில் இஃப்தார் நிகழ்வும் பலஸ்தீன் மக்களுக்கான துஆ பிரார்த்தனையும்

பேருவளை சீனன்கோட்டை முத்துக்கள் வட்ஸப் குழுமத்தின் ஏற்பாட்டிலான இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வும், பலஸ்தீன மக்களுக்காக விசேட துஆப் பிரார்த்தனையும் எதிர்வரும் 24 ஆம் திகதி (24-3-2024) மாலை பேருவளை பங்களாவத்த வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாஸிம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சீனன்கோட்டை நலீமாஜியார் மாவத்தை தாஜீல் மபாஹிரிய்யா ஸாவியா மஸ்ஜிதின் பிரதம இமாம் மௌலவி முகத்தமுஷ்ஷாதுலி முஹம்மத் அஸ்லம் (முஅய்யதி) பலஸ்தீன மக்களுக்காக வேண்டி துஆப் பிரார்த்தனை செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நானா நீயா அவனா ?



சபீர் மொஹமட்

# நீங்கள் முஸ்லிமாக இருப்பதில் மகிழ்ச்சியா?

“நீங்கள் முஸ்லிமாக இருப்பதில் மகிழ்ச்சியா!!” இலங்கையில் அரச தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது அதற்கு பங்கு பற்றிய முஸ்லிம் பெண் எழுத்தாளர் ஒருவரிடம் குறித்த நிகழ்ச்சியில் தொகுப்பாளர் கேட்ட கேள்வி இது ?

குறித்த கேள்விக்கு மிகவும் அற்புதமான முறையில் அந்த இளம் பெண் எழுத்தாளர் பதில் கூறியிருந்ததாக பலரும் பெருமையுடனும் தமது மகிழ்சியை தெறிவித்திருத்தனர். அத்துடன் பல மாற்று மதத்தினரும் இந்தப் பதிலை பாராட்டி இருந்தனர்.

இளம் முஸ்லிம் பெண் எழுத்தாளர் ஸெனீபா ஸனீர், இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாசனத்தின் “நுக செவன” என்கின்ற காலை நேரம் கலந்துரையாடலுக்கு சென்றிருந்தார். குறித்த கலந்துரையாடலிலேயே இந்தக் கேள்வி ஸெனீபாவிடம் கேட்கப்பட்டது. ‘நுக செவன’ நிகழ்ச்சியின் தொகுப்பாளர், எழுத்தாளர் ஸெனீபா ஸனீரிடம் கேட்ட இந்த கேள்வி பற்றியே நாம் இன்று பார்க்கவுள்ளோம். தொகுப்பாளர் கேட்ட கேள்வி கொஞ்சம் பிரச்சனைக்குரியதாக இருந்தாலும் அவர் அதனைக் கேட்ட விதம் கொஞ்சம் வித்தியாசமாக இருந்தது.

ஒரு சிலர் சமூக வலைத்தளங்களில் தமது கருத்தை இவ்வாறும் பதிவு செய்திருந்தனர். அதாவது உண்மையிலேயே குறித்த நிகழ்ச்சி தொகுப்பாளர் வேறு ஒரு நோக்கத்தில் இந்த கேள்வியை கேட்டிருந்தால் குறித்த பெண் எழுத்தாளருக்கு சுதந்திரமாக அவருடைய பதிலை கூறுவதற்கான அவகாசத்தை அங்கே கிடைத்திருக்காது. நிச்சயமாக அவர் பதில்கூறும் போது இடையில் அவரை மறித்து “இல்லை, சர்வதேசத்தில் இவ்வாறெல்லாம் நடக்கின்றது, நீங்கள் எவ்வாறு இப்படி கூறுவது?“ போன்ற கேள்விகளை கேட்டிருப்பார். ஆனால் தொகுப்பாளர் கிரிக்கெட்டில் வருவது போல் ஒரு ‘புல்டோஸ்” பந்தை வீசினார். குறித்த பெண்ணும் மிக நீண்ட தூரத்திற்கு ஒரு ஆறு ஓட்டத்தை அடித்துவிட்டார் என சிலர் தமது கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் தெரிவித்திருந்தனர்.

ஆனால், நான் இங்கே கூற வருகின்ற விடையத்துடன் சிலர் சிலவேளை இணங்காமல் இருக்கலாம். நாங்கள் இரு வேறு விதத்தில் இந்தக் கேள்வியை நோக்க வேண்டும். முதலாவதாக இந்த நாட்டில் சிறுபான்மை மக்களாக வாழ்ந்து வருகின்ற ஒரு சராசரி முஸ்லிம் மனிதன். இரண்டாவதாக ஒரு சராசரி இலங்கை குடிமகன். இலங்கையின் அரச தொலைக்காட்சி நிறுவனத்திற்கு ஒரு முஸ்லிம் பெண்ணை அழைத்து அவரிடம் “நீங்கள் முஸ்லிமாக இருப்பதில் மகிழ்ச்சியா?” என கேட்பது எந்த அளவு தூரம் ஒரு இனத்தின் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பின் வெளிப்பாடு என்பதை பலரும் அறியாதவர்களாக உள்ளார்கள்.

சிலருடைய வாதமாக இருப்பது, இது போன்ற கேள்விகளை முஸ்லிம் சமூகத்திடம் கேட்பது நல்லது. ஏனென்றால் அப்போதுதான் முஸ்லிம் சமூகத்தில் உள்ள இதுபோன்ற பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரலாம். அது தவறு !!

“இலங்கையில் பல முஸ்லிம் பெண்களும் பல வருடங்களாக பல நூறு புத்தகங்களை எழுதி இருக்கின்றார்கள். ஆனால் அவை எதுவும் இங்கே ஆராயப்படவில்லை. மாறாக இது போன்ற ஒரு கேள்வியை கேட்பதன் மூலம் சிங்கள பெறும்பான்மை சமூகம் தங்களின் ஆழ்மனதில் காணப்படுகின்ற இன வெறுப்பினை வெளிப்படுத்த முயற்சிக்கின்றார்கள்” என ஒரு பதிவை நான் சமூக வலைத்தளத்தில் கண்டேன். மேலும் அந்தப் பதிவில் “சிங்களச் சமூகம் பெரும்பான்மையினராக இருப்பதனால் அவர்கள் உணர்கின்ற ‘நசஉநளைநன ைைெஉநஉெந” எனப்படுகின்ற குற்றமற்ற தன்மை இங்கே வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு அவர்கள் சிந்திப்பதன் அடிப்படை கூட அடக்குமுறை மற்றும் மேலாதிக்கம் என்பனவாகும்.

மறுபுறம், இந்த கேள்வியானது ஒரு சமூகம் தமது சமூக அதிகாரத்தை ஆயுதமாக பயன்படுத்துகின்ற ஒரு நிகழ்வின் வெளிப்பாடாகும். இதே கேள்வி ஒரு பௌத்த பெரும்பான்மையினர் இன்னொரு பௌத்தரிடம் போய் நீங்கள் பௌத்தராக இருப்பதில் சந்தோசமா என்று கேட்டால், அங்கே எந்த விதமான பிரச்சினையும் இல்லை. ஒரே சமூகத்தில் வாழ்கின்ற இரண்டு பேர், அதாவது சமமான இருவர் கேட்டுக்கொள்கின்ற ஒரு கேள்வி. அதில் ‘ஆம்’ என்றாலும் ‘இல்லை’ என்றாலும் அதிலே எந்தவித பிரச்சனையும் இல்லை. அந்தப் பதிலை எவராலும் ஆயுதமாக பயன்படுத்துவும் முடியாது. சிலவேளை ஒரு சிங்கள பெண் ‘ஆம்’ என்று கூறினாலும் அங்கே ஒட்டுமொத்த சிங்கள சமூகமும் அதற்கு காரணமாகி விட மாட்டார்கள். சிலவேளை அந்தப் பெண்ணின் குடும்பம் சமூகம் பற்றிய வாத விவாதங்கள் ஏற்படுமே தவிர ஒட்டுமொத்த சிங்கள சமூகம் பற்றி எவரும் விமர்சிக்க மாட்டார்கள்.

ஆனால் இங்கே, ஒரு சிங்கள பெரும்பான்மை சமூகத்தில் சிறுபான்மையாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு முஸ்லிம் பெண்ணை பார்த்து முஸ்லிம் சமூகத்தின் ஆண்கள் உட்பட ஒட்டுமொத்த சமூகத்தையும் குறிவைத்து அவர்கள் அனைவரும் இவ்வாறுதான் என்ற முற்கட்பிதத்திற்கான ‘ளவநசநழவலிந’ முன்னாயத்தமே இதுவாகும். அங்கே கேள்வியில் எந்த விதமான அப்பாவித்தனமோ அல்லது ஆர்வமோ இல்லை. அதேபோல் இந்தப் பெண் கூறுகின்ற ஒவ்வொரு பதிலையும் சிங்கள சமூகத்தினருக்கு ஒரு ஆயுதமாக பயன்படுத்தலாம்.

தன்னால் இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது என்பதால் இந்த பெண் மிகவும் நிதானமான முறையில் ஒரு பதிலை வழங்குகின்றார். அவர் அவ்வாறு செய்யாவிட்டால் அது ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் தாக்கி விடும். சிங்கள சமூகத்தில் உள்ள மக்களை தனி மனிதர்களாக பார்க்கின்ற அதே வேலை ஒரு முஸ்லிம் மனிதனை முற்று முழுதாக அவனுடைய சமூகமாகவே இந்த நாடு பார்க்கின்றது. அதனாலேயே ஒரு சிங்களவன் குற்றம் செய்தால் அது தனி நபர் குற்றம் அது முழு சிங்கள தேசத்திற்கும் பொருந்தாது. ஆனால் முஸ்லிம் பெயரைக்கொண்ட ஒருவர் செய்த ஒரு குற்றத்தினால் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் தமது உயிர் உடைமைகளையே அர்பனிக்க வேண்டி ஏற்பட்டதை நாங்கள் மறந்த்துவிடக்கூடாது. எனவே இந்த முஸ்லிம் பெண் எதை சொன்னாலும் அதை இந்த சமூகம் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் பிரதிபலிப்பாகவே பார்ப்பார்கள்.

உண்மையில் குறித்து கேள்வி கேட்கப்பட்ட விதம் தொடர்பில் எமக்கு பிரச்சினைகள் இருந்தாலும் நிகழ்ச்சி தொகுப்பாளர் எந்த நோக்கத்தில் அந்த கேள்வியை கேட்டார் என்பதை அவர் மட்டுமே அறிவார். ஆனால் கடந்த பல தசாப்த காலங்களாக நமது நாட்டில் நடைபெற்று வருகின்ற அரசியல் சார்ந்த சமூக பிரச்சனைகள் பற்றி ஆராயும் போது மேலே குறிப்பிட்டது போன்ற சந்தேகங்கள் எம் மத்தியில் ஏற்படுவது நியாயமான ஒரு விடயமாகும். நாங்கள் இவ்வளவு தூரம் இவற்றை ஆராயாமல் இதன் மேல் பகுதியை மாத்திரம் பார்த்துவிட்டு தீர்மானம் எடுப்பது கொஞ்சம் ஆபத்தான ஒரு விடயமாகும்.அதாவது நாங்கள் திரும்பத் திரும்ப ஏதோ ஒரு பெரும்பான்மை சமூகத்தினால் ஆளப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் என்பதை நாங்களே திரும்ப திரும்ப உறுதிப்படுத்துகின்றோம். எனவே இது போன்ற சம்பவங்களின் போது நாங்கள் திரும்பவும் அவர்களைப் பார்த்து “ஏன்?” என ஒரு கேள்வியினை கேட்பது காலத்தின் கடமையாக உள்ளது.

இறுதியாக ஒரு முஸ்லிம் பென் எழுதியிருந்த சமூக வலைத்தள பதிவுடன் இந்த பத்தியை நிறைவு செய்கின்றேன். அவர் ஸெனீபாவை நோக்கி, நீங்கள் முஸ்லிம் சமூகத்தில் ஒரு வித்தியாசமானவரோ அல்லது அசாதாரணமான பெண்ணாகவோ வளர்க்கப்படவில்லை. உங்களின் தந்தையை போன்ற பல தந்தைகள் எமக்கும் உள்ளார்கள். உங்களைப் போன்றே தான் நாங்களும் இந்த சமூகத்தில் வளர்ந்தோம். எனக்கும் அனைத்து சுதந்திரமும் உள்ளது. நீங்கள் முஸ்லிம் சமூகத்திற்கு வெளியே உருவாக்கப்படவில்லை. எனவே இங்கு நீங்கள் முஸ்லிம் சமூகத்தின் விதிவிலக்காக பேசுகின்ற பேச்சு மிகவும் தவறானது.

# மோதரை ஹம்ஸா கல்லூரியில்

## நல்லிணக்கத்தை மேம்படுத்தும் இப்தார் நிகழ்வு





**(ஐ.ஏ. காதிர் கான்)**

*நல்லிணக்கத்தை மேம்படுத்தும் இப்தார் நிகழ்வு, கொழும்பு - 15 மோதரை, ஹம்ஸா கல்லூரி மண்டபத்தில் (21) இடம்பெற்றது.*

*ஜனனம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில், ஐ.டி.எம்.என்.சி. (ஐனுஆஊ) சர்வதேச கல்வி நிறுவனத்தின் முழு அனுசரணையில் மிக விமர்சையாக இடம் பெற்ற இவ் இப்தார் நிகழ்வில், சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் ”சட்ட முதுமானி” ஓ.எல். அமீர் அஜ்வாத், ஐ.டி.எம்.என்.சி. (ஐனுஆஊ) சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி வி. ஜனகன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.*

*ஐ.டி.எம்.என்.சி. (IDMNC) சர்வதேச கல்வி நிறுவனத்தின் வியாபார மேம்பாட்டு முகாமையாளரும் ஜனனம் அறக்கட்டளையின் முக்கியஸ்தருமான றிஸ்கான் முஹம்மத், வட கொழும்பு அபிவிருத்திச் சங்கத்தின் முக்கியஸ்தர்களான முஹம்மத் றிஸ்வி, முஹம்மத் ஹஸன், முஹம்மத் மீனாஸ், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் கொழும்பு - கம்பஹா மாவட்டங்களுக்கான பணிப்பாளர் நஸாரி காமில், பேரவை மற்றும் பேரவையின் மத்திய கொழும்பு உறுப்பினர்கள் உள்ளிட்ட கல்விமான்கள், பாடசாலை அதிபர்கள், ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.*

*சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவராக அண்மையில் நியமிக்கப்பட்ட ”சட்ட முதுமாணி” யும், சிரேஷ்ட இராஜதந்திரியுமான ஓ.எல். அமீர் அஜ்வாத் மற்றும் ”வசந்தம்” தொலைக்காட்சியின் பிரதான முகாமையாளராக சமீபத்தில் நியமணம் பெற்ற எம்.எஸ்.எம். இர்பான் ஆகியோரை, கலாநிதி ஜனகன் இச்சிறப்பு நிகழ்வில், பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவித்தார்.*




# பொருளாதார நெருக்கடி காலத்தில் பெண்களின் பங்களிப்பு பேசுபொருளாகிறது

## பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ்

(பாறுக் ஷிஹான்)

பொருளாதார நெருக்கடி காலத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட சவால்களை எதிர்கொண்டிருந்தும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெண்களின் பங்களிப்பு பேசுபொருளாகிறது என கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் குறிப்பிட்டார்

"பெண்களுக்கு ஆதரவளிப்பதன் மூலமாக பொருளாதார நிலைமாற்றம், நெருக்கடி நிலமைக்கு ஒரு பதிலடி" எனும் தொனிப் பொருளிலான இந்நிகழ்வு சர்வதேச மகளீர் தினத்தையொட்டி கல்முனை வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இன்று (20) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்ததாவது

ஆண், பெண் என வேறுபாடுகள் இருந்தாலும் எல்லோரும் மனித வர்க்கமாக வகைப்படுத்தப்பட்டதுடன் கௌரவமாக வாழக்கூடிய உரிமையை அவர்களுக்கு உறுதிப்படுத்தல் வேண்டும். பெண்களின் தொழிலானது பொருளாதார நெருக்கடி காலத்தில் பெரிதும் பாதிப்புக்குள்ளானது. பாரம்பரிய வரம்புகளால்



கட்டுண்டமையினால் அதன் பிரதிபலனை பெண்கள் அனுபவிக்க முடியாதிருக்கிறது.

ஆனால் பெண் தொழிலாளர்களின் உரிமைகள் அதன் நிலமைகள் கவலைக்கிடமாகவுள்ளது. பெண்களுக்கெதிரான பாலியல் துஸ்பிரயோகங்கள் இலங்கையில் அதிகளவில் காணக்கூடியதாகவுள்ளது. ஆண்களிலும் பார்க்க பெண் வியாபாரிகள் கடன் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் காணப்படுகிறது. ஆனால் கடன்களைப் கூடுதலாக பெறுகின்ற வர்க்கமாக பெண்கள் இருக்கிறார்கள்.

இன்று கடன் வழங்கும் வங்கிகள் நாளுக்கு நாள் திறக்கப்பட்டு வருகின்றன. இவ் வங்கியில் கடன் பெற்றபவர்களாகவும். இலகு கடனில் பொருட்களை கொள்வனவு செய்பவர்களாகவும் குடும்பப் பெண்கள் இருக்கின்றனர். இவர்கள் மாதந்தோறும் கடன் பணத்தை கட்ட முடியாதிருக்கும் இக்கட்டான சூழ்நிலை ஏற்படுமாகவிருந்தால் கடன் முகவர்களுக்குப் பயந்து சொந்த வீட்டில் இருக்க முடியாது மறைந்து வாழ முற்படுகின்றனர். காலப் போக்கில் இவ்விடயம் அவர்களுக்கு உளரீதியான தாக்கத்தை ஏற்படுத்தி உயிரை துச்சமாக நினைத்து செய்கின்ற தற்கொலைச் சம்பவத்தையும் அறியக்கூடியதாக இருக்கிறது என தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சிரேஸ்ட உதவி நூலகர் கலாநிதி.எம். எம்.மஸ்ருபா கலந்து கொண்டு விசேட சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்வில் அரச அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், சிவில் மக்களும் கலந்து கொண்டனர்.

# இலங்கை மாணவர்களுக்கு மேகாலய தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் அனுமதி

மேகாலய தேசிய சட்டப் பல்கலைக்கழகம் இலங்கையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வுகளை கொழும்பில் நடத்த திட்டமிட்டுள்ளது

இந்தியாவின் புதிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப சட்டக் கல்விக்கான எதிர்காலத்தினையும். அடுத்த தலைமுறையினரை சட்ட வல்லுனர்களாகவும், அறிஞர்களாகவும் வளர்ப்பதற்காக பலதரப்பட்ட கல்வித் திட்டங்களை கொண்டு மேகாலயா தேசிய சட்ட பல்கலைக்கழகம் 2022 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

2024 ஆம் கல்வியாண்டுக்கான திட்டங்களில் எதிர்காலம் சார்ந்த அணுகு முறையை முன்னோடியாக கொண்டு இளங்கலை, முதுமாணி மற்றும்மீ.னு ஆகியவற்றுக்கு ஆர்வமுள்ள இலங்கை மாணவர்களை அழைக்கின்றது.

இது தொடர்பாக 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி கொழும்பு கேட்வே கல்லூரியில் நுழைவுத் தேர்வுகளை நடத்த திட்டமிட்டுள்ளது. இத் தேர்வில் வழங்கப்பட்ட வரையறை புள்ளிகளை எட்டும் மாணவர்கள் அடுத்த கட்டத்தில் நுழைவார்கள்.

மேலும் மாணவர்கள் இது தொடர்பான சந்தேகங்கள் அல்லது மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள திருமதி. இடரிலாங் சைம்லியை தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம்: +0913463507700, மின்னஞ்சல்: ida@nlumeg.ac.in

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழிபெயர்ப்பு தின விழா



நூருல்ஹுதா உமர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் 2023 விழா மற்றும் கண்காட்சி கடந்த (21) பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

கலை கலாசார பீட மொழித்துறை ஏற்பாட்டில், துறைத் தலைவர் கலாநிதி ஸ்ரீகருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஜி. விக்னேஷ்வரன் கௌரவ அதிதியாக கலந்துகொண்ட இந்நிகழ்வில், மட்டக்களப்பு கல்விக் கல்லூரியின் முன்னாள் உபபீடாதிபதி மனோகரன் அதிதி உரையாற்றியதுடன் கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட பீடாதிபதி பேராசிரியர் சதானந்தன், தொழிநுட்பவியல் பீட பீடாதிபதி பேராசிரியர் மதிவேந்தன் பட்டதாரி



கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கென்னடி மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

விழாவின் மற்றொரு முக்கிய அம்சமாக நடைபெற்ற மொழிபெயர்ப்பு தொடர்பான விடயங்கள் அடங்கிய கண்காட்சியை கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஆரம்பித்து வைத்தார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இந்நிகழ்வின் போது அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பொலிஸ் நிலையத்தில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். றம்ஸீன் பக்கீர் தலைமையில் பொலிஸ் நிலையத்தின் திறந்த வெளியரங்கில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கலாநிதி சட்டத்தரணி அஜித் ரோஹண பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இப்தார் விசேட மார்க்க சொற்பொழிவுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ, கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ். எம் சம்சுதீன், அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம். என் ஜயபத்ம, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம். எல்.புத்திக உட்பட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், இராணுவ , கடற்படை அதிகாரிகள் பொலிஸ் பரிசோதகர்கள், சர்வமத தலைவர்கள், மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர் .

நிகழ்வின்போது கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சிவில் சமூக அமைப்பினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# வெலிப்பன்னை பகுதியில் பெண்களுக்கான மஸ்ஜித்


பீ எம் முக்தார்

வெலிப்பன்னை பிரதான வீதிக்கு பக்கத்தில் பெண்கள் தொழுவற்கான மஸ்ஜித் அமைக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை (08) ஜ/ம்மாத்தொழுகையின் பின் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 40 வருடங்களுக்கு முன் ஷாதுலியா தரீகாவின் ஆண்மீகத் தலைவர் பாஜி ஷைகுஸ் ஸஜ்ஜாத வெலிப்பன்னைக்கு விஜயம் மேற்கொண்ட சமயம் சீனாங்கோட்டை மக்களால் வாங்கப்பட்ட இவ் இடத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.

பின் நீண்ட காலமாக கைவிடப்பட்டிருந்த நிலையில் உள்ள இவ் இடத்தில் துபாய் நாட்டைச் சேர்ந்த அரபிச் சகோதர் ஒருவரின் பணத்தால் அழகான ஒரு மஸ்ஜித் அமைக்கப்பட்டு ஜ/ம்மாவும் நடைபெற்று வருகிறது. தெற்கு அதிவேகப் பாதை அமைந்த பின் வெளியூர் மக்களின் வருகை அதிகரித்ததனால் பெண்கள் தொழுவதெற்கென தனிப்பட்ட இடம் இல்லாத காரணத்தால் பல பெண்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் . இதன் காரணமாக இவ்வழியால் பயணம் மேற்கொள்ளும் பெண்களுக்கு சில வசதிகளுடன் கூடிய இப்பள்ளிவாசல் அமைக்கப்பட்டது.

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai -
Tamilnadu, India)



# இலங்கையில் அரக்கனாக மாறி வரும் போதை கலாச்சாரம்!

## - உண்மை பார்வை -

போதைப்பொருள் கடத்தல், ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட எல்லை தாண்டிய குற்றமாகத் தொடங்கிய நிகழ்வாகும். இந்த சர்வதேச மாஃபியா மற்றும் பயங்கரவாத குழுக்களுடனான அதன் தொடர்பு சர்வதேச பிரச்சினை மற்றும் அச்சுறுத்தலாக வெளிப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 26ம் தேதி சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினமாக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

மேலும் இந்த சர்வதேச தினம் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்திற்கு எதிரான ஐ.நா-வின் சர்வதேச தினமாகும். இது கடந்த 1989-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஜுன் 26 அன்று அனுசரிக்கப்பட்டு வருகிறது.

மனித சமூகத்திற்கு போதை பொருள் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகளை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. உலக அளவில் போதை பொருட்களின் பயன்பாடு, போதை பொருள் கடத்தல், போதைப் பொருள் விற்பனை மிகப்பெரிய முக்கிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. இதை அதிர்ச்சிகரமான விஷயம் என்னவென்றால் உலகம் முழுவதும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சுமார் 30 கோடிக்கும் மேற்பட்டோர் போதை பொருட்களுக்கு அடிமையாக இருக்கின்றனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே, போதை பொருள் பயன்படுத்துபவர்களில் மூன்றில் ஒருவர் பெண் என்பது மற்றொரு அதிர்ச்சி தகவல்.

ஐ.நா வின் பிரச்சாரம் போதைப்பொருள் மற்றும் குற்றத்தின் ஆண்டு உலக மருந்து அறிக்கையிலிருந்து (ுசரபள யனெ ஊசைஅந'ள யுெைவட றுழசடன னுசரப சுநிழசவ) குறிப்பிடத்தக்க சில உண்மை தரவுகளையும் முன்வைக்கிறது. இந்த தரவுகள் அனைவருக்கும் ஆரோக்கியம் குறித்த விஞ்ஞான பார்வையை அடைய தற்போதைய உலகளாவிய போதை மருந்து பயன்பாடு நெருக்கடியை குறைக்க, உண்மை மற்றும் நடைமுறை பதில்களையும் முன்வைக்கிறது.

அண்மைக்காலமாக போதைப்பொருள் கடத்தலுக்கான மத்திய நிலையமாக இலங்கை மாறிவருகின்ற நிலையில் போதைப்பொருள் பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றதை புள்ளிவிபர தரவுகள் ஊடாக நாம் புரிந்து கூடியதாகவுள்ளது.

போதைப்பொருள் கடத்தல், பாவனை மற்றும் கைது சம்பவங்கள் தொடர்பான கடந்த கால தகவல்களை ஆராயும்போது கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மாத்திரம் 152,979 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது. குறிப்பாக மேல் மாகாணத்திலேயே அதிகளவு கைது சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

குறித்த காலப்பகுதியில் 69,688 கைது சம்பவங்கள் ஹெரோயின் பாவனை மற்றும் விற்பனை தொடர்பில் பதிவாகியுள்ளதுடன் 53,579 கைது சம்பவங்கள் கஞ்சா போதைப்பொருள் தொடர்பிலும் 686 பேர் போதைப்பொருள் வில்லைகள் தொடர்பிலும் 39 பேர் கொக்கெய்ன் தொடர்பிலும் 197 கைது சம்பவங்கள் ஹஸீஸ் தொடர்பிலும் பதிவாகியுள்ளன. ஒரு சிறிய தீவு தேசத்தில் வருங்கால தலைமுறைகள் இந்த அளவுக்கு பாதிக்கப்பட்டு இருப்பது மிகுந்த கவலை தரக்கூடிய செய்தியாக உள்ளது.

கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளில் 1,677.102 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் 17,607.422 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதற்கு அதிகமாக 283.873 கிலோகிராம் மெத்தம்பேட்டமைன் எனப்படும் ஒருவகை போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு தகவல்களை ஆராயும்போது கிட்டத்தட்ட 110,031 பேர் போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த சில ஆண்டுகளில் இருந்ததை விட போதைப்பொருள் தொடர்பான கைது சம்பவங்கள்13 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கஞ்சாவை விடவும் ஹெரோயின் போதைப் பொருள் பாவனை தற்போது இலங்கையின் வடக்கில் அதிக பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

"இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து வடக்குக்கு அதிகமாக கஞ்சா போதைப்பொருள் கடல் வழியாகக் கொண்டு வரப்படுகிறது. ஹெரோயின் வேறு வழியாக வடக்குக்குள் வருகிறது. போதைப்பொருள் வியாபாரிகள் அனைத்து இடங்களிலும் - போதைப் பொருள் பாவனையைப் பழக்குகின்றனர். குறிப்பாக மாணவர்களையும் இளைஞர்களையும் இலக்கு வைக்கின்றனர்," என்கிறார் மாவட்ட அரச அதிபர் மகேசன்.

"வறுமை யில் இருப்போரை இந்தத் தொழிலுக்குள் இலகுவில் ஈர்த்து, அவர்களை போதைப் பொருள் கடத்தலில் வியாபாரிகள் பயப்படுத்துகின்றனர்" எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஹெரோயின் போதைப் பொருள் வியாபாரிகள் மிகவும் நுட்பமானதொரு கட்டமைப்பை கொண்டிருப்பதாக தெரிய வருகிறது. கூலித் தொழிலாளர்களை அதிகமாகக் கொண்ட பகுதிகளிலேயே போதைப் பொருள் பாவனை அதிகமாக உள்ளது என சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருள் பாவனையால் அதிகமான இளவயதினர் நோய்வாய்ப்பட்டும் தற்கொலை செய்தும் உயிரிழந்துள்ளனர். அத்தோடு, நூற்றுக்கணக்கானவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையான நிலையில், சிகிச்சைகளுக்காக மருத்துவமனை மற்றும் போதை விடுவிப்பு நிலையங்களிலும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இலங்கையை பொருத்தவரை கடந்த ஆண்டுகளில் காணப்பெற்ற சாராயம் மற்றும் கள்ளு போன்ற போதை கலாச்சாரத்தை தாண்டி தற்போது மனிதனை உடனடியாக சுயநினைவை இழக்க வைக்கும் போதைப்பொருட்களின் திணிப்பில் வந்து நிற்கின்றது.

கஞ்சா, ஹெரோயின், கூல் ஐஸ் என்று பல வகைப் போதைப்பொருட்களும், வடக்கு - கிழக்கின் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விநியோகிக்கப்படுகின்றன.

அதுவும், யாழ்ப்பாணத்தில் பிரபல பள்ளி, கல்லூரிகளை ஒட்டிய பகுதிகளில், போதைப்பொருள் விநியோகமும் பாவனையும் சர்வசாதாரணமான விடயங்களாக மாறிவிட்டன.

போதைப்பொருள் மாபியாக்கள், உலகம் பூராவும் இளவயதினரையே குறிவைத்து, தங்களது வியாபாரத்தை திறக்கின்றன. அதிலும் குறிப்பாக, பதின்ம வயதினரை போதைக்கு இரையாக்குகின்றார்கள். அந்த வயதில் போதைக்கு அடிமையாக்கிவிட்டால், போதை மாபியாக்களுக்கு அவர் வாழ்நாள் வாடிக்கையாளர். அப்படித்தான், இலங்கையிலும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே, போதைப்பொருள் வர்த்தகம் விஸ்தரிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி என்ற பெயரில் இலங்கையின் கலாச்சார மரபு ரீதியான கட்டமைப்புகள் உடைக்கப்பட்டு மேலத்தேய கலாச்சாரம் புகுத்தப்பட்டு, இன்றும் அதற்குப் பலர் அடிமையாகி வெளிவர முடியாமல் பல குடும்பங்கள் திணறி வருகின்றன. இளைஞர்கள், இளம்பெண்கள் இடையே பரவியுள்ள குடி போதைப் பழக்கம், என புனர்வாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டு என்றுமில்லாதவாறு இலங்கையை உலக நாடுகளிடையே முகம் சுழிக்க வைத்து இருக்கிறது.

ஒரு குடும்பத்தில் நான்கு சுவருக்குள் என்ன நடக்க வேண்டுமோ, அது இன்று இலங்கையின் பொது வெளியில் நடந்து வருவது மிகவும் ஒரு அடிமட்ட கலாச்சார சீரழிவை நோக்கி இலங்கை சென்று கொண்டிருப்பதை பார்க்க முடிகின்றது . மேலும் என்றும் இல்லாதவாறு இலங்கையில் அதிகரித்த மறுவாழ்வு புனர்வாழ்வு முகாம்கள்.. இவை என்ன என்று ஆராய்ந்து பார்த்தோமேயானால் முழுவதுமாக போதைக்கு அடிமையாகி சீரழிந்தவர்களை மீட்டெடுக்கும் நிறுவனம் என கூறுகிறார்கள். இளைஞர்களுக்கு தனியாக புனர்வாழ்வு முகாம், இளம்பெண்களுக்கு தனியாக புனர்வாழ்வு முகாம் அமைக்கப்பட்டு தற்போது அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதை கண்கூடாக காண முடிகிறது .

இலங்கையில் கடந்த பத்து வருட இடைவெளியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான போதை புனர்வாழ்வு மையங்கள் நான்கு இடங்களில் தொடங்கப்பட்டன. ஆனால் அது இன்று பரந்து விரிந்து இலங்கை முழுவதும் புனர்வாழ்வு மையங்கள் அமைக்கும் அளவுக்கு போதைப் பொருள்கலாச்சாரம் என்பது இலங்கையில் தலைவிரித்து ஆடுகிறது. ஆனால் கடந்த மூன்று வருடங்களோடு ஒப்பிடும்போது மேலும் இந்த புனர்வாழ்வு மையங்கள் அதிகரிப்பதை காண முடிகிறது. போதைக்கு அடிமையாகி தமது வாழ்வையும், குடும்பங்களையும் இழக்கும் இலங்கை சேர்ந்த இளைஞர் யுவதிகளின் எண்ணிக்கை அதிகம் என்றே சொல்லப்படுகிறது. கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு இந்த புனர்வாழ்வு முகாம்கள் அதிகளவாக காலி (உனவட்டுன), கொழும்பு, நிட்டாம்புவ, கண்டி(பேராதனை), பொலன்னறுவை (கந்தக்காடு) என சிங்கள பிரதேசங்களை அதிகளவாக மையப்படுத்தியே ஆரம்பிக்கப்பட்டு இருந்தது.

தற்போது குறிப்பிட்ட அளவு இந்த புனர்வாழ்வு மையங்கள் வடக்கு கிழக்கு தமிழ் பகுதிகளிலும் அமைக்கப்பட்டு இருப்பதாகவே கூறப்படுகிறது. இங்கு போதை என்று குறிப்பிடுவது குடிப்பழக்கத்தை மட்டுமல்ல ,அதாவது மதுபானம் மட்டுமல்ல ,கஞ்சா ,அபின், ஹெரோயின் மற்றும் பல வகை போதைப் பொருட்களுக்கு இலங்கையின் இளைய தலைமுறை முற்று முழுவதுமாக பாதிக்கப்பட்டு அவற்றுக்கு அடிமையாகி உள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் மிகவும் தொடர்புடைய போதை கலாச்சாரம் இலங்கை போன்ற சிறிய தீவில் ஆக்கிரமிப்பு செய்ய சர்வதேச பின்னணி மிகவும் முக்கியமான காரணியாக விளங்குகிறது. நாடுகளை தாண்டி இந்த நெட்வொர்க் இலங்கை பன்முக தன்மை கொண்ட சமூகத்தில் சொல்ல இயலாத தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இலங்கையில் அதிகரித்துள்ள போதை பழக்கவழக்கம் - கிளி நொச்சியில் சில கிராமங்கள் சுற்றி வளைப்பு:

இலங்கையில் அதிகரித்துள்ள போதை பழக்கவழக்கம் - கிளி நொச்சியில் சில கிராமங்கள் சுற்றி வளைப்பு!

இலங்கை போதை கலாச்சாரம் கடல் வழியாலும், ஆகாய வழியாலும் பல நாடுகளில் இருந்து நாளுக்கு புதுவித போதைவஸ்துக்கள் இலங்கையில் அறிமுகமாக்கப்படுகிறது. கஞ்சா, ஹெரோயின், ஐஸ் போதைப்பொருட்களை விற்பனை செய்வோரும் நுகர்வோரும் அதிகரித்த வண்ணமே உள்ளனர். இதன் பாதிப்பை உணர்ந்த சில தமிழ், சிங்கள, இஸ்லாமிய நேர்மையான அதிகாரிகள் ஒரு கூட்டாக இணைந்து ஜனாதிபதி வரை இப்போதை பொருட்கள் நாட்டையும் நாட்டின் எதிர்கால சந்ததியினரையும் சீரழிக்கிறது என எடுத்துக் கூறியுள்ளனர்.

இதை செவிமடுத்த ஜனாதிபதி ஒரு குழுவை நியமித்து எங்கெங்கு போதைப் பொருள் பாவனையில் உள்ளதோ அங்கெல்லாம் இரகசிய தேடுதலை நடாத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளார். இதற்குள் போதைக்கு எதிராக குரல் கொடுக்கும் அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களினதும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது .

இந்தகுழுவின் தீவிர செயற்பாட்டின் ஊடாக விரைவில் போதையை கட்டுப்படுத்த முடியும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. மீனவர்கள், வெளி நாட்டவர்கள் தங்கும் விடுதிகளில் வேலை செய்பவர், பாடசாலையில் வேலை செய்யும் ஆசிரியர்கள் சிலர், இக்குழுவோடு இணைந்து கடமையாறுகிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க அரசு தமது ஆட்சியை தக்க வைக்க போதைப்பொருட்களை ஒழித்து சிங்கபூரை போல கொண்டு வரவேண்டுமென காய் நகர்த்துகிறதாம். அதனை மனதில் வைத்தே சில தினங்களின் முன்னர் நான் விரைவில் இலங்கையை சிங்கப்பூர் ஆக்குவேன் என கூறியது குறிப்பிடத்தக்கது.

எது எதுவாக இருப்பினும் இலங்கையில் மட்டுமல்ல உலகிலேயே மதுபானம் உட்பட எவ்வித போதைப் பொருளும் இருக்கக்கூடாது எனவும், ஆயுதங்கள் நாடுகளை ஆளக்கூடாது என்வும் பல பொது நல விரும்பிகள் கூறுகின்றனர்.

இலங்கை சிங்களவர்கள் வாழும் பகுதிகள் மற்றும் தமிழர்கள் வாழும் பகுதிகள் தாண்டி இஸ்லாமிய மக்கள் வாழ்ந்து வருகின்ற எல்லா பகுதிகளிலும் மிகப் பெரிய அளவில் இந்த கலாச்சாரம் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்த நாசகார கலாச்சார போதைப் பொருட்கள் பரிவர்த்தனைகள் பலவற்றை உள்நாட்டு மாஃபியாக்கள் தொடர்பு இல்லாமல் நடத்துவது இயலாத காரியமாக உள்ளது. நிச்சயமாக அதிகாரத்தை கையில் வைத்து இருப்பவர்கள் இதன் தொடர்பில் மறைமுகமாக இருக்க அதிக வாய்ப்பு உள்ளது என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

இலங்கை கடந்த ஆண்டுகளில் சந்தித்து வந்த மோசமான சிக்கலான பொருளாதார ஸ்திரத்தன்மை, கொரானா தாக்குதல், இலங்கையின் அந்நிய கடன்கள் இதையெல்லாம் சமாளிப்பது மிகுந்த சவாலாக இருந்து வரும் நிலையில் போதை மருந்து கலாச்சாரம் மிகப்பெரிய பெரிய பயங்கரவாத தாக்குதலுக்கு ஒப்பானது என்பதில் ஐயமில்லை. இலங்கையின் உள்நாட்டு அரசியல் தலைவர்கள் இதில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட வேண்டும். ஏனெனில் நாட்டின் வளரும் சமூகங்கள் போதைப் பொருட்களை உட்கொள்வது ஒட்டுமொத்த தேசத்தையும் முடக்கி விடும் அபாயகரமான பிரச்சினை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. 22 மில்லியன் சனத்தொகை கொண்ட இலங்கை அரசு இந்த நாசகார கலாச்சார பின்னணியை கண்டு பிடித்து அழிக்க முன் வரவேண்டும்.அதற்காக நாடாளுமன்றத்தில் முறையாக சட்ட திருத்தம் கொண்டு வர முயற்சி செய்யலாம். இது போன்ற மாற்றங்கள் ஒட்டு மொத்த தேசத்தின் வளர்ச்சி மற்றும் சமூக பாதுகாப்பை எல்லா நிலைகளிலும் உறுதிப்படுத்தும் என்பதில் எந்த ஐயமும் இல்லை என்பதே எமது பார்வையாகும்.

# கிழக்கு மாகாண ஆளுநர் ஏற்பாட்டில் காத்தான்குடியில் இப்தார் நிகழ்வு











காத்தான்குடி ஜம்மியத்துல் உலமா, பள்ளிவாசல் சம்மேளனம், வர்த்தக சம்மேளனம் மற்றும் நகர சபையுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் தலைமையில் இப்தார் நிகழ்வு இடம்பெற்றது. சுமார் 5000 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணன் மற்றும் கௌரவ அதிதிகளாக முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீஸ், முஷாரப், அலி சாஹிர் மௌலானா மற்றும் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் இப்தார் நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.



உலக நீர் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் அனுராதபுரம் கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி டி. பாத்திமா ஷஹாமா முதலிடம் பெற்றுள்ளார்.

உலக நீர்தினத்தை முன்னிட்டு கடந்த (22) வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் இவருக்கான பரிசும் சான்றுதலும் வழங்கப்பட்டன.

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

## மாற்றம் வருமா?

தலைமைத்துவத்தின் அவசியம் காரணமாகவே தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட வேண்டும் என்ற எண்ணக்கரு உருவாகியுள்ளது. இஸ்லாமும் தலைமைத்துவதிற்கு முக்கியம் கொடுத்துள்ளது. எல்லா விடயங்களுக்கும் தலைமைத்துவம் தேவை என்றும் அந்தத் தலைமைக்கு கட்டுப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது. கட்டுக்கோப்பான ஒழுக்கமுள்ள சமூகம் உருவாக சரியான தலைமைத்துவம் அவசியமாகவுள்ளது.

இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்த வரை அரசியல் என்றால் என்ன மார்க்க விடயங்கள் தஃவா அமைப்புக்கள் என்றால் என்ன தலைமை இருக்கிறது. கல்வி நிலையங்கள், மத்ரஸாக்கள் மட்டுமல்ல பயணங்கள் செய்யும் போதும் அதற்கு தலைமை தேவைபப்டுகிறது. ஹஜ் உம்ராக்களுக்கு கூட தலைமை தேவைப்படுகிறது. மக்களை வழி நடத்தும் உலமாகக்ளின் அமைப்பான உலமா சபைக்கும் தலைமை உள்ளது.

தலைமையையன்று இருந்துவிட்டால் மாத்திரம் போதாது சம்பந்தப்பட்டவர்கள் அந்தத் தலைமையின் தீர்மானங்களை ஏற்று நடக்க வேணடும். அவ்வாறு நடந்தால் தான் தலைமையின் பயன் இருக்கும். தலைவரின் தீர்மானத்துவக்கு எதிராக நடக்கத் தொடங்கிவிட்டால் தலைமையில் பயனில்லை.

நியமிக்கப்படும் தலைமைகள் சரியான தீர்மானங்களையும் வழிகாட்டல்களையும் சரியாக செய்யா விட்டால் மக்கள் தலைவர்களின் செயல்பாடுகளுக்கு மாறுசெய்து விடுவர்.

இலங்கை முஸ்லீம்களைப் பொறுத்த வரை சமூகத்தின் தலைமை எனக் கருதப்படும் கூறப்படும் உலமா சபை உள்ளது. இந்த சபை முழு நாட்டிற்கும் ஒன்றே உள்ளது. அநேகமான இடங்களில் உலமா சபை முஸ்லீம்களைப் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிறது.

இலங்கை முஸ்லீம்களின் அரசியலை பொறுத்த வரை முஸ்லீம் அரசியல் கட்சிகள் உள்ளன. ஆரம்பத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சி மர்ஹூம் எம். எச். எம் அஷ்ரபினால் ஆரம்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அப்போதைக்கு பதிவு செய்யப்பட்ட ஒரே முஸ்லீம் கட்சி இதுவாகும். அதன் ஆரம்ப கர்த்தாவும் தலைவருமான அஷ்ரபின் தீடீர் மறைவின் பின் கட்சி ஒன்று இரண்டாகி பின் பலதாகி விட்டன. இவற்றிற்கு தனித் தலைமைகளும் தனி ஆதரவாளர்களும் இருக்கின்றர். சுருக்கக் கூறின் ஒன்றாக இருந்த சமூகம் பல கூறுகளாக பிரிந்து விட்டன. அரசியல் நோக்கம் காரணமாக இவ்வாறு பிரிந்து தனித்து இயங்கத் தொடங்கி விட்டன. அவற்றிலும் கிளைகள் காணக்கூடியதாக உள்ளது. தமது அரசியல் நோக்கமாக கட்சி அமைந்த நிலையில் அதற்கு ஆயுதமாக பிரதேச வாதம், ஊர் வாதம், மாவட்ட வாதம், மாகாண வாதம் என பல காரணங்கள் பின்னால் மறைந்து உள்ளன.

ஒரு தனிக்கட்சியாக இருந்த போது முழு முஸ்லீம் சமூகத்தின் நன்மைக்குப் போராடிய கட்சி பலதாக மாறியவுடன் அந்தந்த கட்சிகளின் தலைமைகள் நன்மை கருதி செய்யப்பட்டன.

தலைமைகளும் முக்கியஸ்தர்களும் தமது பதவியையும் இருப்பையும் காத்துக் கொள்ள எதையும் செய்யத் தலைப்பட்டனர். அங்கத்தவர்கள் தமது சொந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள செயல்பட்டனர். இதனால் சமூகத்தின் பொதுவான முக்கிய தேவைளை ஒரே குரலில் முன்வைத்துப் போராடும் நிலை மாறி விட்டது. ஒருவர் செய்தவற்கு எதிராக மற்றவர் பேசுவதும் செயற்படுவதும் சாதாரணமாகி முஸ்லீம்களின் தேவைகள் மறைக்கப்படுகின்றன. எம்மவரோ ஒருவருக்கொருவர் திரை மறைவு யுத்தம் புரிந்து கொண்டிருக்கின்றனர். சமூகத்தின் தேவைகள் அப்படியே இருக்கின்றன.

தமிழ் அரசியல் கட்சிகளைப் பாருங்கள். அவை தனித்தனியாக செயல்பட்டாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் ஒரே கருத்தைக் கொண்டுள்ளன. அவர்களின் போராட்டம் ஒன்றிணைந்த போராட்டங்களாக உள்ளன. தனித்தனியே போராடினாலும் கொரிக்கை ஒன்றே. இதனால் கோரிக்கைகளும் பலம் பெறுகின்றன. இப்போது பந்தம் பிடிக்கும் ஓரிருவர் தனியாக வேறு கருத்துடன் செயல்பட்டால் எப்போதும் மக்களால் புறக்கணித்து விடப்படுகின்றனர். ஏற்கனவே இவர்கள் ஒதுக்கப்பட்டுள்னர்.

முஸ்லீம்களைப் பொறுத்த வரை மத விடயங்களில் தலைமைக்கு கட்டுப்படாமைக்கு அண்மைக்கால உதாரணம் ஒன்ற உண்டு. அண்மையில் உலமா சபை வெளியிட்ட அறிக்கையொன்று இதனை உறுதிப்படுத்துகிறது. உலமா சபை அறிக்கையில் “ஜுஆத் தொழுகையை ஒரு மணிக்கு முடித்துக் கொள்ளும்படி நாம் பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு அறிவித்துள்ள போதும் அவர்கள் அதன்படி செயல்படுகின்றார்கள் இல்லை“ என்பதே இவர்களின் அறிவித்தல். அதாவது பிறபகல் ஒரு மணிக்கு ஜும்ஆ தொழுகையை முடித்துக் கொள்ளுங்கள் என்பதே அதி உயர் சபையான உலமா சபையின் அறிவுறுத்தலாம்.

இந்த அறிவித்தலை பள்ளி நிர்வாகிகள் செயல்படுத்த வேண்டும். ஜும்ஆ பிரசங்கம் நடத்தும் உலமாக்களுக்கு இதனை கூற வேண்டும். அதாவது பள்ளி நிர்வாகிகளும் உலமாக்களும் இதன்படி நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பள்ளிகளின் உலமாக்களின் மட்டுமல்ல முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தவிர்ந்த தலைமைத்துவம் உலமா சபைக்கே உண்டு. எனவே, அதன் அறிவுறுத்தல்களை உத்தரவுகளை ஏற்று நடத்த வேண்டியது கடமை எனலாம். அதாவது உலமா சபையின் தலைமைத்துவத்துக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

இவ்வாறு உத்தரவை, அறிவுறுத்தலைப் பிறப்பிக்கும் உலமா சபை நாங்கள் கூறுவதை ஏற்று நடக்கிறார்கள் இல்லையே என்று அங்கலாய்க்கிறது.

தலைமைத்துவத்தை மதிக்காத தன்மை இதில் நன்கு புலனாகிறது. நன்கு ஆராய்ந்தே உலமா நபை இந்த முடிவை எடுத்திருக்கும். அதை ஏற்க பல பள்ளிகள் தயாரில்லை. அவ்வாறாயின் இந்தப் பள்ளிகள் எந்த நிர்வாகத்தின கீழ் வருகின்றன. அவற்றிற்கு வேறு சபையா அல்லது தனித்தனி தஃவா இயக்கங்களா தலைமை தாங்குகின்றன.

இஸ்லாம் கட்டுக்கோப்பான ஒழுக்கமான சமூகம் என்று நாமே பறையடிக்கிறோம். ஆனால் எங்கள் செயற்பாடுகளில் இவை இல்லை.

இதற்கு சில காரணங்கள் உண்டு. எம்மில் அநேகர் அமைப்பு பற்றி விமர்சிப்பதற்கு பதிலாக தலைமைகளை தனிப்பட்ட ரீதியில் விமர்சிக்கின்றாறம். அரசியற் கட்சிகளின் கொள்கைகள், செயற்பாடுகளை விமர்சிப்பதை விட்டு விட்டு தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிக்கிறோம். பிரதேச வாதம் ஊர்வாதம் போன்றவற்றை உள் மனதில் வைத்துக் கொண்டு அவர்களை விமர்சிக்கின்றோம்.

உலமா சபையின் பதவி வகிப்போரை அவர்கள் சார்ந்த தஃவா இயக்கத்தை உள் மனதில் வைத்துக் கொண்டு விமர்சிக்கின்றனர். அந்தப் பதவி வகிப்போரும் பதவிக்கு வந்தவுடன் தமது தஃவா அமைப்பின் பிரதிநிதியாக செயல்படாது சமூகத்தின் தலைவராக செயற்பட வேண்டும்.

எனவே, எமது அரசியல் தலைமைகள் மட்டுமல்ல உலமாக்களின் தலைவர்களும் மாற வேண்டும்.




நாச்சியாதீவு பர்வீன்

# ரும்மானின் ரூபித் தீவு:

## (இலங்கை முஸ்லிம்களின் வரலாறு)

-Z.A. ஷன்கிர்-

"வாசிப்பீராக" என்று தொடங்கும் இறை வசனத்தை விசுவாசித்தோர் நாம். கும்மிருட்டிலும் வாசிக்கவேண்டுமென்ற வேட்கை, கொழும்பில் மாமா வீட்டில் தங்கியிருந்த அந்த அறபி மருமகனுக்கு ஏற்படுகின்றது. செரந்தீபில் கிடைத்த, விலைமதிக்க முடியாத "ரூபி"யின் வெளிச்சத்தில் மருமகனுக்கு வாசிக்க உதவுகிறார் மாமா. இதுதான் ரும்மானின், "ரூபித் தீவின்" தொடக்கம். பாரசீக வரலாற்றாசிரியர் அல் பிரூனியின் நூலிலுள்ள ஒரு சம்பவம் இது.

"பாவா ஆதம் மலையைத் தரிசிக்க ஆரம்பம் முதலே அரேபியர் செரந்தீபுக்கு வந்தனர் கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்தே இங்கு குடியேறினர்" போன்றனவற்றை உறுதிபடக்கூறி, விஜயனும் குவேனியும் சந்தித்துக்கொண்டது முதல், இலங்கை சுதந்திரம் பெற்றதுவரையான வரலாற்றை, புத்தகத்தின் மனம் நுகர்ந்து, பக்கங்களை விரல்களால் தொட்டுப் புரட்டி அனுபவித்து வாசிக்கத்தூண்டுகிறார், ரும்மான். இவரின் ரூபித் தீவு முழுதும் மாணிக்கங்களும் முத்துக்களும் வாசனைத் திரவியங்களும் விரவிக்கிடக்கின்றன.

பெறுதற்கரிய நம்நாட்டுத் திரவியங்களை சூறையாடிச்செல்ல "சிலோனை", ஐரோப்பியர் படுத்தியபாட்டை விலாவாரியாக விளக்கும் நூலாசிரியர், இந்நாட்டில் ஏற்றுமதிப் பொருளாதாரம் ஒன்றை அறிமுகப்படுத்தி "ஸரன்தீப்"பை மையப்படுத்தி, சர்வதேச வர்த்தகத்தைக் கட்டியெழுப்பிய அறேபியர் பற்றியும் குறிப்பிடுகிறார். அத்துடன் அரசின் உயிரைக்காத்து நாட்டின் இறைமையைக் காப்பாற்றிய முஸ்லிம்கள், அவர்களது நாட்டுப்பற்று, சிங்கள முஸ்லிம் உறவு கட்டியெழுப்பப்பட்ட விதம் போன்றன இந்நூலில் இழையோடி நிற்கின்றன. அதேவேளை, முஸ்லிம்கள் நல்லூர் போராட்டத்தில் இந்துக்களோடு தோளோடு தோள்கோர்த்துப் போராடியதையும் சொல்லத் தவறவில்லை.

"அந்தப் பொல்லாத் தடித்த யானைக்குட்டியின் கடும் கோபத்தைக் கண்டு" அத்தியாயங்கள் படிப்படியாக நகருகின்றன. ஆம்! இலங்கையின் இராசதானிகளை அடுத்தடுத்துப் பட்டியலிட ரும்மான் போட்ட சூத்திரம் இது. இந்த வசனத்தின் ஒவ்வொரு வார்த்தையின் முதல் எழுத்தும் இராசதானிகளைக் குறிக்கின்றன. "இஞ்சியின் காரம் அதிகமாக இருக்கின்றதே என்று சில்லென்று சிவப்பாக இருந்த மிளகாய் ஒன்றைக் கடித்த" அரசனைத் தொடர்ந்து, கதை விரிந்து, இறுதியில், முஸ்லிம்களையும் துணையாகக்கொண்டு, சுதந்திரக் காற்றை சுவாசித்து, இருபத்திநான்கு அத்தியாயங்களும் உசாத்துணையுடன் நிறைவுக்கு வருகின்றன.

நமது நாட்டு நிகழ்வுகளைப் பற்றிக் கதைக்கும்போது, அக்கால கட்டத்தில் நிலவிய சர்வதேச சூழல், நமது நாட்டு நடப்புக்களில் எவ்வாறு செல்வாக்கு செலுத்தியது என நூலாசிரியர் முடிச்சுப்போட்டுக்காட்டுவது பாராட்டத்தக்கது. இலங்கை முஸ்லிம்களின் மூதாதையரான அறபிகள், ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னரே இங்கு வந்துவிட்டதை நிறுவ அறபுக் கவிதைகளின் தந்தையான இம்ரவுல் கைஸின் வரிகளிலிருந்து ஆதாரம் தருகின்றார் அவர். கைஸின் காலத்தில்தான் விஜயனின் வருகையும் நிகழ்கின்றது.

"பூமிப்பந்து மத்தியிலிருக்க, சூரியனும் இன்ன பிற கோள்களும் அதனைச் சுற்றி வலம் வந்துகொண்டிருந்த காலத்தில்" வருகை தந்த மார்கோபோலோ, இப்படியும் ஒரு தீவா? என "சிலோனை"யும் இங்கு வாழ்ந்த முஸ்லிம்களையும் பற்றி எழுதிவைத்ததை சிலாகிக்கிறார் நூலாசிரியர். அது, உள்நாட்டில் பல்லாயிரம் சிக்கல்கள் நிலவிய தம்பதெனிய இராச்சியத்தின் ஆரம்பகாலம். இங்கு தம்பதெனிய, யாப்பகுவ காலப்பகுதியில் இடம்பெற்ற அப்பாஸியரின் வீழ்ச்சிபற்றி ஒப்பீட்டாராய்வது. சிறப்பாயுள்ளது.

ரூபித் தீவில், முஸ்லிம்கள் வர்த்தகத் துறையில் மட்டுமல்லாது வைத்தியம், நெசவு, விவசாயம், முத்துக்குளிப்பு, உப்புத் தொழில், மீன்பிடி, யானைபிடித்தல், கட்டிடத்துறை, போர் நடவடிக்கைகள், வெளிநாட்டுத் தூது என அனைத்துத் துறையிலும் கால்பதித்து, நம் நாட்டுக்கு உதவிசெய்த வரலாறுகளை அழகாக சித்தரித்துள்ளார் ஆசிரியர் ரும்மான்.

எருதுகள் "தவளம்" என்ற வணிக நடவடிக்கைக்காகவும், ஒட்டகங்கள் போருக்காகவும் முஸ்லிம்களால் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுவருக்கு சாந்துபூசும் தொழில்நுட்பத்தை முஸ்லிம்கள் தெரிந்துவைத்து மன்னர் பராக்கிரமபாகுவுக்கு உதவியவிதம் சிறப்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் மகோன்னத மருத்துவதுக்கு கிடைத்த பரிசு கம்பளை, கஹட்டபிட்டி என்ற கிராமமாகும். அவர்களின் வீரதீர செயல்களுக்கான வெகுமதி அக்குறனையாகும். இராஜதந்திரத்துக்குக் கிடைத்தது மாவனல்லை, அரநாயக்க, கடபேரிய என்ற ஊராகும். தவள முறை வர்த்தகத்துக்கு மாவனல்ல, ஹிங்குல கிராமமும் ஒட்டகப் போருக்கு வெல்லவாயவும் ஆதாரங்களாயுள்ளன. பேராதனைப் பூங்காவின் தோற்றத்துக்குக் காரண கர்த்தாக்களும் முஸ்லிம்களே. இவை அனைத்தும் ரூபித் தீவில் ஆங்காங்கே அழகுற சித்தரிக்கப்பட்டுள்ளன.

பிரித்தாளும் தந்திரத்தில் பெயர்பெற்ற பிரிட்டிஷார், முஸ்லிம் ஒருவரை "மடிகே முகாந்திரமாக" நியமிக்கப்போய் ஏற்பட்ட முரண்பாடுகளும், 1915 கண்டிக் கலவரமும் பிட்டும் தேங்காய்ப்பூவுமாக இருந்த சிங்கள முஸ்லிம் உறவு, ஒடும் புளியம் பழமுமாக மாறியதை மிகுந்த வருத்தத்துடன் தெரியப்படுத்துகிறார் நூலாசிரியர் ரும்மான். ஆங்கிலேயர் காலத்தில் இலங்கை முஸ்லிம் தலைவர்கள் தமது சமூக மறுமலர்ச்சிக்காக ஆற்றிய அளப்பரிய தொண்டினை அழகாகக் கூறி, நிறைவுக்கு வருகிறது ரும்மானின் ரூபித் தீவு.

முடிவில் ஒரு முடிவுரையாக, 1947 இல் அரசியல் சாசனப்படி உருவான முதலாவது பாராளுமன்றத்தின் முதலாவது பிரதிநிதி புத்தளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய எச். எஸ். இஸ்மாயில் என்ற ஒரு முஸ்லிம் என்பதுடன், அவரே சுதந்திர இலங்கையின் முதலாவது முஸ்லிம் சபாநாயகருமாவார். அவர் எனது மாமனாரின் தாய் மாமா என்பது, நூலில் இடைக்கிடை வருவதுபோன்ற ஒரு கொசுறுத் தகவல்.

ரும்மானிடமிருந்து இன்னும் நிறைய எதிர்பார்க்கின்றோம். வாழ்த்துக்கள்.

---



# பள்ளிவாசல் நிர்வாகம் என்பது என்ன?

## அது ஒரு பகடை விளையாட்டா?

கவிப்புனல் கலாபூஷணம் கே.எம்.ஏ. அஸீஸ்

பிரபஞ்சம் தோன்றிய காலத்தில் இருந்து பல்துறை சார் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் தான் உலகம் இன்று வரை செயற்பட்டு வருகிறது. அந்த வகையில் ஆன்மீகத்துறை சார்ந்த நிர்வாக செயற்பாட்டின் இன்றைய காலகட்டக் கண்ணோட்டத்தை எந்தவித நெளிவு, சுழிவுகளுக்கோ காழ்ப்புணர்ச்சிக்கோ உட்படுத்தாமல் பொதுவான ஆய்வுக்குட்படுத்துவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கம் என்பதை முதற்கண் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஒரு பொதுவான வாய்மொழி வழக்குச் சொல் என்றாலும் இச்சொல்லுக்குள் ஆயிரம் தத்துவங்கள் முத்திரை குத்தியிருப்பதை ஆழ்ந்து சிந்திப்போர்க்கு நன்கு புலப்படும்.

ஏனைய துறைகளை விடவும் ஆன்மீகம் சார்ந்த மத வழிபாட்டுத் தலங்களை "கோயில்" என்ற ஒரு சொல்லால் விழித்து, "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என அழுத்தமாக சுட்டிக்காட்டியிருப்பதானது மனித சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், உன்னத கலாசார வளர்ச்சிக்கும் அது எத்தகைய பங்களிப்பைச் செய்கிறது என்பதை எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இந்த வகையில் எமது இஸ்லாமிய வழிபாட்டுத் தலமான புனித பள்ளிவாசல்கள் பற்றியும், அவற்றின் பராமரிப்பாளர்கள் பற்றியும் மேலான குர்ஆன் ஹதீஸின் வெளிச்சத்தில் இருந்து உதிர்ந்த சில துளிகளை பதச்சோறாக இங்கு பகிர்ந்து கொள்ளலாம் என விழைகிறேன்.

அறப் பணியாளர்களுக்கு இருக்க வேண்டிய தலைமைப் பண்புகள் எவை?

உலகப் பொதுமறையாம் அல்குர்ஆனை அருளாக வழங்கிய ஏக வல்லோனாம் அல்லாஹ் "அத்தெளபா 18" என்ற அத்தியாயத்தின் ஊடாக அவனே அருளுகின்றான். "அல்லாஹ்வின் பள்ளிவாசல்களை நிர்வாகம் செய்பவர்கள் யாரெனில், அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு தொழுகையைக் கடைப்பிடித்து, ஸகாத்தையும் கொடுத்து, அல்லாஹ்வைத் தவிர வேறு எதையும் எவரையும் அஞ்சவில்லையோ அவர்கள் தான். அத்தகையூர் நேர்வழி பெற்றவர்களில் நின்றும் இருக்கப் போதுமானவர்கள், என்று அசைக்க முடியாத ஆளுமைத் தன்மைகளைப் படைத்தவன் என்றோ நிர்ணயித்து விட்டான். இதில் எந்தவொரு மகானுக்கும் கையடிக்கவோ, கூட்டிக் குறைக்கவோ எவருக்கும் எந்தவித உரிமையும், சலுகையும் அறவே கிடையாது. இது அவனின் பொதுவான தீர்ப்பு அதனை அனைவரும் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

அநேகமான பள்ளிவாசல்களில் இன்று நடப்பதென்ன?

ஏக நாயன் வகுத்த தகைமை இது ஒரு பக்கம். இவ்வாறிருக்க, அல்லாஹ்வின் புனித இல்லமாகிய பள்ளிவாசல்களை நிர்வாகம் செய்வோர், அவர்களை வழிநடாத்தும் தலைவர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகிறார்கள். இக்காலகட்டத்தில் உற்று நோக்கும் போது, ஈமானிய நெஞ்சங்கள் உள்ள எவரும் வேதனைப்படாமல் இருக்க முடியாது.

ஒரு மஹல்லாவிலேர் அல்லது ஜு/ம்ஆப் பெரிய பள்ளிவாசலிலோ நிர்வாகத் தெரிவு இன்ன நாளில் இடம்பெறப் போகிறது என அறிந்தால் போதும், அங்கே சிற் சில கோஷ்டிகள் வரிந்து கட்டிக்கொண்டு மழைக்கு முளைத்த காளான்கள் போல் வெளியாகி விடுவார்கள். அவரவர் சார்ந்த கொள்கைப் பிரகடனங்களை உச்சாடனம் செய்யும் மத்திய நிலையங்களாகப் பள்ளிகளை மாற்றுவதற்கான பலப் பரீட்சையில் கோஷ்டி மோதல்கள், வாய்த் தர்க்கங்கள் ஏற்படுவதை அன்றாடம் நேரடியாகவும் ஊடக வாயிலாகவும் அறிந்தும், கேட்டும் வருகின்றோம். இரவு, பகலாக அதற்கான ஆட்சேர்ப்பு, சுயநல நாடகம் அரங்கேறும்.

ஓர் ஊரின் கலை, கலாசார விழுமியங்களைக் கட்டிக்காத்து, போஷித்து வழிநடத்தும் வல்லமை குழுவின் தலைமைத்துவத்திற்கு இன்றியமையாத ஒன்று என்பதை நான் கூறித்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியம் கிடையாது. இது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விடயம். "தலைவர் எவ்வழியோ குடிகள் அவ்வழியே" என்ற கூற்றிற்கு ஏற்ப, ஒரு சிலரின் சுயநலப் போக்கில் எதிர் மாற்றமான தலைமைகள் உருவாகும்பட்சத்தில் அங்கே இருண்ட யுகத்திற்கான அத்தியாயம் வழிந்து இடப்படுகிறது. இதனைக் கருதியே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இன்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்பே எச்சரிக்கை செய்திருப்பதானது இப்படியானோர்களின் அகக்கண்ணைத் திறக்க இது ஒன்றே போதுமானது என நம்புகிறேன்.

இதோ அவர்களின் அருள்வாக்கு, "உலகில் அநியாயக்கார அறிவிலிகள், நுனிப்புல் மெய்வாளர்கள் நிர்வாகத்துக்குள் உள்வாங்கப்படுவதானது உலகம் அழியப் போவதற்கான துர்ச்சகுணம் சமிக்ஞை என எச்சரிக்கை விடுத்திருப்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அருளியதாக புரைதா (ரலி) அவர்கள் வாயிலாக அபூதாவூத் என்ற கிரந்தத்தில் வரையப்பட்டிருக்கும் ஓர் உள்ளத்தை உருக்கும் இச்செய்தி கவனத்திற் கொள்ளத்தக்கது.

"முனாபிக்" ஒருவனைப் பார்த்து, யாரும் அவனைத் தலைவன் என அழைக்க வேண்டாம். அவன் உங்கள் தலைவனாக இருப்பின், நீங்கள் உங்கள் "ரப்பைக்" கோபப்படுத்தி விட்டீர்கள்". ரப்பைக் கோபப்படுத்தினால் என்ன நடக்கும்? அதனை இன்று வரை நாம் எல்லோரும் அனுபவித்துக் கொண்டு தானே வருகிறோம். எல்லா நெருக்கடிகளுக்கும், தலையிடிகளுக்கும் முழுமுதற் காரணி நம் கரங்களால் நாமே சுயமாகத் தேடிக் கொண்ட வினை என்பது இன்னும் புரியாமற் போனதற்கு என்ன காரணம்?

மமதை, அறியாமை, நான் தான் பெரியவன் என்ற தற்பெருமை, கர்வம் தலைக்கேறி, உலகியலில் எல்லா அமைப்புகளுக்குள்ளும் ஊடுருவி பரவலாகப் பெயரெடுக்க வேண்டும் பேசப்பட வேண்டும்.

என காக்காப் பிடித்து களமிறங்கத் துடிக்கும் கனவான்கள், நபிகளார் காலத்தில் நடந்த ஒரு வரலாற்றுச் சம்பவத்தை நினைவிற்கு மீட்டிப் பார்ப்பது நலம் என நம்புகிறேன்.

அன்று, புனிதம் நிறைந்த மாண்புறு மக்கமா நகர் மாநபியின் சுரங்கங்களுக்குள் மண்டியிட்டுப் பிடிபட்ட போது அப்பகுதியின் இரு மாநிலங்களுக்கு தங்களை கவர்னர்களாக இணைத்துக் கொள்ளுமாறு உத்தம தோழர்களான இரு சஹாபாக்கள் வேண்டிக் கொள்ள, நபியவர்கள் அவர்களைப் பார்த்து நீங்கள் இருவருமே அதற்குத் தகுதியற்றவர்கள், மறுமையில் அல்லாஹ்வின் கேள்வி கணக்கிற்குப் பயந்து கொள்ளுங்கள், என ஆணித்தரமாக அறிவுறுத்திய சம்பவம் நம்மவர் காதுகளுக்கு இன்னும் தான் எட்ட வில்லையா?

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அந்திம வேளை தனக்குப் பின் சமூகத்தை வழி நடாத்திச் சரியான பாதையில் இட்டுச் செல்லக்கூடிய கலீபா ஒருவர் பின் வாரிசாக நியமிக்கப்பட வேண்டும் என்ற "மசூரா" ஆலோசனை வந்த போது, அருமை நபியின் உயிருக்குயிரான தோழர் ஹசரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் பெயர் சஹாபாக்களால் முன்மொழியப்பட்டது. அப் பதவியின் ஆழ அகலத்தை சத்தியத் தூதரின் சன்மார்க்க ஒளியில் பட்டை தீட்டப்பட்ட அன்னார் இதன் மூலம் தன்னால் சமூகத்துக்கு ஏதும் இடர் நேர்ந்து, அல்லாஹ்வின் கோபப்பார்வைக்கு ஆளாகி விடுவேனோ எனப் பயந்து, வேண்டாமென மறுத்தும் தோழர்கள் விடவில்லை. உலகில் உயிர்வாழும் போதே சுவர்க்கவாசி என சுப சோபன நன்மாராயம் கூறப்பட்ட அவ்வுத்தமர், சத்தியத்தின் காவலர் தயக்கத்துடன் ஏற்று அன்று அவர்களால் ஆற்றப்பட்ட உரை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. அவற்றிலிருந்து சில துளிகள் இதோ...!

அன்பார்ந்த உயிரான என் உடன்பிறப்புகளே...! கண்மணி நாயகம் (ஸல்) அவர்களால் கட்டிக்காத்த இம் மேலான கலீபா பொறுப்பை என் மீது சுமத்தியுள்ளீர்கள். நானும் உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதன் தான். தவறுக்கும், மறதிக்கும் இடையில் படைக்கப்பட்டவன். சிலவேளை என்னாலும் தவறு விடப்படலாம். அதனைத் தட்டி கேட்டு, என்னை நேர்வழிப்படுத்தும் உரிமை உங்கள்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...)

## மனநலமும் ஆலோசனையும் 24

# வழிகாட்டப்பட வேண்டிய எமது பிள்ளைகள்

ஒரு காலத்தில் எமது கிராமங்களில் பள்ளி மாணவர்கள், வாலிபர்கள் குறிப்பாக இரவு நேரங்களின் போது பாதையோரங்களில், சந்திகளில், மூலைமுடுக்குகளில் காரணமின்றி சுற்றித் திரிவதையோ கூடிக் கதைத்துக் கொண்டிருப்பதையோ காணும் போது கிராமத்தில் உள்ள பெரியவர்கள் அந்த வாலிபர்களை அல்லது பிள்ளைகளை அழைத்து இரவு நேரத்தில் செய்ய வேண்டிய விடயங்களை அவர்களுக்கு நினைவூட்டி அந்தந்த இடங்களில் இருந்து அவர்களை அனுப்பி விடுவார்கள். அடுத்த கேள்வி எதுவும் கேட்காமல் அவர்களும் அந்தந்த இடங்களில் இருந்து விலகிச் சென்று விடுவார்கள். சிலசமயங்களில் உரத்த குரலில் கடுமையாக ஏசிப்பேசும் சந்தர்ப்பங்களும் உண்டு.

அப்படி நடக்கும் நேரத்தில் கூட குறித்த பிள்ளைகளோ அவர்களது பெற்றோர்கள் எந்த கேள்விகளும் கேட்கவோ அல்லது முரண்பட்டுக் கொள்வதோ இல்லை. பெற்றோர் தன் பிள்ளைகள் பக்கம் இருப்பதை விட பெரியவர்களின் வழிநடத்தலில் நம்பிக்கை வைத்தவர்களாக இருப்பார்கள். இது கிராமங்களின் தனித்துவத்தின் அழகான அடையாளங்களில் ஒன்றாக இருந்தது.

அன்று பெரியவர்கள் மதிக்கப்பட்டார்கள். எந்த இடத்தில் தவறுகள் நடப்பதை கண்டாலும் அவர்கள் தைரியமாக அவற்றை சுட்டிக் காட்டினார்கள். வாலிபர்களும் பிள்ளைகளும் வீட்டால் மட்டுமன்றி கிராமத்தில் இருந்த பெரியவர்களின் வளமான வார்த்தைகளால் பண்படுத்தப்பட்டார்கள். அடக்கம் ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை வாலிபனுக்கு வழங்கப்பட்டது. வாலிபனும் வளமடைந்தான். அவன் வாழ்ந்த சூழலும் சுகம் கண்டது.

எமது கிராமங்களின் இன்றைய நிலை எப்படி இருக்கிறது என்று கொஞ்சம் சிந்திப்போம். வாலிபர்களும் பிள்ளைகளும் இரவு நேரங்களில் எங்கெல்லாம் இருக்கிறார்கள்?

அவர்கள் என்னவெல்லாம் செய்கிறார்கள்?

அவர்களுக்கு யார் புத்தி சொல்வது?

அவர்களோடு எப்படி கதைப்பது?

யார் அவர்களை வழிநடத்துவது?

இந்த வினாக்களுக்கு பதில் தருவது அவ்வளவு இலகுவல்ல.

பள்ளிக்குப் போவதாக, இரவுத் தொழுகைக்குப் போவதாக வீட்டில் சொல்லிவிட்டு அவர்கள் எங்கு போகிறார்கள்?

என்ன செய்கிறார்கள்? என்று பெற்றோர்கள் தேடிப்பார்க்கிறோமா?

எல்லா பிள்ளைகளும் அப்படி இல்லை என்றாலும் பலரின் நிலை கவலை தருவதாக உள்ளது.

தெருவோரங்களில், சந்திகளில் நடமாடுவதை தவிர்த்து பள்ளிக்கு வருமாறு பள்ளிவாசல் நிர்வாகங்கள் அறிவுரை வழங்கினாலும் அவ்வப்போது ஒலிபெருக்கி மூலம் அழைப்பு விடுத்தாலும் கேட்டும் கேட்காதது போல் ஒரு கூட்டம்.

அப்படியே தயவாகக் கூட புத்திமதி சொன்னால் அதற்கு எதிராக பேசுகின்ற இன்னொரு கூட்டம்.

“என் மகனுக்கு நீங்கள் ஏன் அறிவுரை சொல்ல வேண்டும்“ என்று கேள்வி கேட்டு மோதிக் கொள்ள பார்க்கும் சில பெற்றார்கள்.

இப்படி பொறுப்பற்று நடக்கும் வாலிபர்களின் பரிதாப நிலைகண்டு புத்தி சொல்வதா..! சொல்லாமல் தன் பாட்டில் போய்விடுவதா..!

என்று மனதால் கவலையை சுமந்து கொண்டு ஏக்கத்துடன் செல்லும் பெரியவர்கள்.

முன்பை விட இன்று வாலிபர்களுக்கும் ஏன்.! பிள்ளைகளுக்கும் கூட புத்தி சொல்வதற்கு பலரும் பின்வாங்குவதுண்டு. புத்தி சொன்னால் வேறு எதாவது சொல்லி விடுவார்களோ.. அல்லது சண்டை சச்சரவுகளில் முடிந்து விடுமோ என்ற பயமும் பலருக்கு உண்டு.

மனிதர்கள் எல்லோரும் சமூகப் பிராணிகள் என்பதால் அவர்கள் நலவுகளில், பின்னடைவுகளில், பிழைகளில், வெற்றிகளில், தோல்விகளில், சுகயீனத்தில், மரணத்தில் என்று பலவற்றில் பங்கேற்று உறவுடனும் உணர்வுடனும் வாழ்வதுதான் சமூகநல வாழ்க்கை.

இதன் தேவையை உணராததனாலும் உணர்த்தப்படாததனாலும் ”எனக்கு எவரும் எதுவும் சொல்லத் தேவையில்லை” என்ற வரட்டு மனநிலையில் வாழும் ஒரு துர்ப்பாக்கிய நிலையில் எமது சில வாலிபர்களும் சில பெற்றோர்களும் இருப்பது மிகவும் வருத்தம் தருகிறது.

இந்த நிலையை இப்படியே விட்டுவிடுவதா?

கண்டும் காணாமலும் போய்விடுவதா?

ஓரிருமுறை சொல்லிவிட்டு இவர்கள் உருப்படமாட்டார்கள் என்று எண்ணி கைவிரித்து விடுவதா?

இந்த நிலையை மாற்றி எமது பிள்ளைகளை சரியான முறையில் வழிகாட்டி நன்னடத்தை உள்ளவர்களாக ஆக்க பெற்றார்கள், பள்ளி நிர்வாகங்கள், சமூக மேம்பாட்டு நிறுவனங்கள், கல்வி மற்றும் ஆன்மீக துறைகளில் பணியாற்றுபவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு அழகான திட்டத்தை உருவாக்க வேண்டியிருக்கிறோம்.

எமது சமூகத்தின், எமது நாட்டின் எதிர்காலம் எமது பிள்ளைகளும் வாலிபர்களும். அவர்களை முறையாக அரவணைத்து, அவர்களை மதித்து, அவர்கள் பயனும் பெறுமதியும் நிறைந்தவர்கள் என்பதை உணரச் செய்து அவர்களால் விரும்பக்கூடிய ஒரு பொறிமுறையை உருவாவாக்கி அவர்களை நல்வழிப்படுத்துவது நவீன காலத்தின் அவசியமான தேவை என்பதை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொண்டு அதற்கான பயணத்தை ஆரம்பிக்க வேண்டி இருக்கிறோம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# 136 உதவி ஆசிரியர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கி வைப்பு



**(க.கிஷாந்தன்)**

மத்திய மாகாணத்தில் பல காலமாக இழுபறியில் இருந்த 136 உதவி ஆசிரியர்கள் (22) நிரந்தர ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டனர்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன் ஆகியோரின் வேண்டுக்கோளுக்கமைவாக, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் இதற்கான நியமன கடிதங்கள் இன்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா நோய் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமை ஆகியன காரணமாக இவர்களுக்கான நியமனங்களை வழங்குவதில் பல இழுபறி நிலைமைகள் மற்றும் அவர்களால் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களில் சில குளறுபடிகள் காரணமாகவும் நியமனம் வழங்குவதில் இந்த தாமதம் ஏற்பட்டது.

இதனையடுத்து, அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரன் ஆகியோரின் நேரடி தலையீட்டின் காரணமாக 136 ஆசிரியர்களுக்கு நியமன கடிதங்கள் இன்றைய தினம் வழங்கப்பட்டது.

# கற்பிட்டி வர்த்தக சங்கத்தின் புதிய நிர்வாகக் குழு தெரிவு



**(எம்.எச்.எம் சியாஜ்)**

கற்பிட்டி நகர வர்த்தகர்களை மையமாக கொண்டு செயற்படும் கற்பிட்டி வர்த்தக சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் கற்பிட்டி பஸார் ஜும்ஆ பள்ளி வாசலில் இடம் பெற்றது, இதில் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய தலைவராக எஸ்.ஏ.எம். றியாத், செயலாளர் எஸ்.ஏ சராஜ், உப தலைவராக பீ. பிரகாஷ், பொருளாளராக பீ. எம் பைனாஸ், உப செயலாளராக எம்.என்.எம் அர்ஷாத், கணக்காய்வாளராக எஸ்.ஏ.எம் நியாஸ்தீன் ஆகியோருடன் மேலும் 10 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.





**பயாஸா பாஸில்**

# பேச்சை அழகாக்குவோம்



மனிதனானவன் தனக்கு கிடைத்த பல அருட்கொடைகளை வைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறான். அதில் ஒன்று நாவு. அந்த நாவை நாம் எப்படி பயன்படுத்த வேண்டும் என்பது புரியாதவர்களாக நாம் வாழ்கிறோம்.

பேசி விட்டால் போதும் என்று சிந்திப்போமே தவிர அந்தப் பேச்சு எவ்வாறானதாக அமைய வேண்டும் என்பதை நோக்கத் தவறுகிறோம்.

பேசும்போது,

1. அளவாக பேச வேண்டும்.

2. அழகாக பேச வேண்டும்.

3. ஆட்களைப் பொறுத்தே பேச வேண்டும்.

ஒரு மனிதன் தனக்கு அவசியமற்ற விடயங்களில் தலையிடாமல் இருப்பதே சிறந்தது.

”..... இன்னும் மனிதர்களுக்கு அழகானதைச் சொல்லுங்கள்...” (பகரா : 83)

” கால் தவறி விழுவதை விட மனிதன் வாய் தவறி விழுவதே அதிகம்” (பைஹகீ)

இதனால் தான் ஆயுள் முழுவதும் சிறையில் இருக்க வேண்டிய உறுப்பு நாவு என்றும் கூறப்படுகின்றது.

எனவே சிறந்த முறையில் எம் நாவுகளைப் பாதுகாத்துக் கொள்வோமாக...!!

# ஸகாத்தை வாரி வழங்குவோம் வள்ளல்களாக மாறுவோம்

இஸ்லாத்தின் கடமைகளில் மூன்றாவது கடமையை ஸகாத். ஸகாத் என்பது மொழியில் வளர்ச்சி ,தூய்மை , சீர்மை , பரக்கத் போன்ற பல கருத்துக்களை தருகின்றது. ஜகாத் என்பது நன்மையை எதிர்பார்த்து செய்யப்படுகின்ற பணத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு இபாதத்.

இது சமூகத்தின் பணக்காரர்களிடமிருந்து பெறப்பட்டு அந்த சமூகத்தின் ஏழைகளுக்கு வழங்கப் படுவதாகும் என்று நபியவர்கள் கூறியுள்ளார்கள்.



“தொழுகையை நிலை நாட்டுங்கள் ஸகாத்தையும் கொடுத்து வாருங்கள்..” **(பகரா:43)**

இந்த அல்குர்ஆன் வசனத்தின் மூலம் தொழுகை எந்த அளவுக்கு முக்கியமாய் கருதப்படுகின்றதோ அந்த அளவுக்கு ஸகாத் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

ஒரு பயிரை நட்டு அது பல மடங்காக பல்கிப் பெருகி விளைச்சல் தருவது போலவே அல்லாஹ்விற்காக வேண்டி நாம் செய்யும் தான தர்மமானது பல்கிப் பெருகி பல மடங்காக விளைவை தருகின்றது.

ஸகாத்தின் நோக்கங்களாக :

**1. வறுமையை ஒழித்தல்**
**2. தூய்மைப்படுத்துதல்**
**3. அபிவிருத்தி**

போன்ற பல கருத்துக்களை தந்தாலும் சமூகத்தில் உள்ள பாரிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தவிர்க்கப்பட வேண்டும். தனி மனிதனும் சுய கௌரவத்துடனும், மரியாதையுடனும் வாழ வேண்டும். என்ற பிற காரணிகளும் நோக்கப்படுகின்றன.

ஸகாத்தினை உரிய முறையில் நிறைவேற்றி , அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்து பயன் பல பெறுவோம்.

## முஸ்லிம்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்தின் தமிழ் வடிவம். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் என்ற அடிப்படையில் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி.

கடந்த 20 வருடகால இலங்கையின் அரசியல் சூழ்நிலைகளை (2005-2024 வரையான) தொடராக அவதானிக்கின்றவர்கள் என்ற அடிப்படையில் அங்கு ஏற்பட்டிருக்கின்ற அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகள் குறித்து எமக்கு ஒரு ஆழ்ந்த கவலையும் கரிசனையும் இருக்கின்றது.

2005களில் ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் தொடக்கம், ஒரு குடும்ப ஆட்சியை இலங்கையில் நிலைநிறுத்தும் விதமாகவே அமைந்திருந்தது. அப்போதுமுதல் இலங்கையின் ஆட்சிப்பரப்பில் சர்வாதிகார நடைமுறைகள் வெளிப்படத் தொடங்கின. அதனைத் தொடர்ந்த இறுதி யுத்தமும் அதனோடு இணைந்த சர்வதேச குற்றச்சாட்டுக்கள், வசீம் தாஜுதீன் உட்பட பல்வேறு தனிநபர்களின் படுகொலைகள், காணாமல் போத்தல்கள், இனவெறுப்பை மையப்படுத்திய ஒரு அரசாங்க முறைமை நாட்டில் நிலவியது. 2014 அளுத்கம பேருவளைக் கலவரங்கள் ஹலால் எதிர்ப்பு நடவடிக்கைகள் எனப் பலவிதமான இனவெறுப்பு நிகழ்வுகளை நாம் காணக்கூடியதாக இருந்தது.

2015 மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கம், அதிலே அரங்கேறிய குளறுபடிகள், இனவன்முறைகள், 2018 கண்டி- திகன கலவரங்கள், 2019 ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் அதனைத் தொடர்ந்த இனப்பாகுபாட்டு காலங்கள், கோத்தபாயவின் ஆட்சிக்காலம் பொருளாதார நெருக்கடிகள், மக்கள் எழுச்சிப்போராட்டங்கள், தற்போதைய ரணிலின் ஆட்சிக்காலம். இவை அனைத்துமே இலங்கை மக்களையும் இலங்கை நாட்டையும் பல்வேறு கஷ்ட துன்பங்களுக்கும் பின்னடைவுகளுக்கும் இட்டுச்சென்றிருக்கின்றது.

2022 தொடங்கி 2024 வரையான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார நெருக்கடிகள், இலங்கையின் வங்குரோத்து நிலைமைகள், கடன்களை மீளச்செலுத்த முடியாத சூழ்நிலைகள், அளவுக்கதிகமான ஊழல் மோசடிகள், உலக வங்கியின் தலையீடுகள், அதனைத் தொடர்ந்து இலங்கைக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற பொருளாதார விதிமுறைகள், அளவுகடந்த வரிவிதிப்புகள், உயர்ந்திருக்கும் வாழ்க்கைச்செலவுகள், மருத்துவ நெருக்கடிகள், கல்வி கற்கின்ற மாணவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் என மிகமோசமான ஒரு பின்னடைவை நோக்கி இலங்கை நாளுக்கு நாள் நகர்கின்றது.

ஒரு பொறுப்புவாய்ந்த சிவில் சமூக அமைப்பு என்ற அடிப்படையிலும், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்ற அடிப்படையிலும் எம்மால் மேற்படி நிலைமைகளை மௌனமாகக் கடந்து செல்ல முடியாது இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்பு செய்வது எமது கடமை என்றே நாம் உணர்கின்றோம்.

2019 ஜனாதிபதித்தேர்தல் தொடங்கி தங்களது தேசிய மக்கள் சக்தியின் அரசியல் முன்னெடுப்புக்கள், கொள்கைப் பிரகடனங்கள், பாராளுமன்ற உரைகள், ஊடக செயற்பாடுகள், மக்களை விழுப்புணர்வூட்டும் செயற்பாடுகள் என்பவற்றை தொடராக அவதானிக்கின்றவர்கள் என்ற அடிப்படையில் நீங்கள் இலங்கை மக்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள் குறித்தும், அவற்றுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கான உபாய மார்க்கங்கள் குறித்தும் போதுமான அறிவையும் தெளிவான பார்வைகளையும், தேவையான ஆற்றல்களையும் கொண்டிருக்கின்றவர்கள் என்பதை எம்மால் அனுமானிக்க முடியுமாக இருக்கின்றது.

அதேபோன்று இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு வெளியிலும் இலங்கையின் அரசியல் மாற்றங்கள் குறித்து பல்வேறு காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் நாம் அவதானித்திருக்கின்றோம்.

இலங்கையில் இதுவரைகாலமும் மாறிமாறி அதிகாரத்தைக் கைப்பற்றிவந்த ஆட்சியாளர்களும் அரசியல் கட்சிகளும் தாம் அனுபவித்த ஆட்சியதிகாரங்களை ஒருபோதும் இன்னொரு புதிய அணியினருக்கு விட்டுக்கொடுக்க விரும்பாத ஒரு சூழ்நிலை காணப்படுகின்றது. அவர்கள் தம்மில் ஒருவர் அல்லது ஒரு கட்சி தனித்தோ அல்லது கூட்டாகவோ மீண்டும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும் அதனூடாக தாம் அனுபவித்துவந்த ராஜசுகபோகங்களைத் தொடர்ந்தும் அனுபவிப்பதற்கும் விரும்புவார்கள், அதற்கு அவர்கள் எந்த எல்லைவரை செல்வதற்கும் துணிவார்கள்.

சர்வதேச நாடுகள் இலங்கையின் அரசியல் நகர்வுகளை தமக்கு சாதகமாக எவ்வாறு பயன்படுத்துவது என்று உன்னிப்பாக அவதானிக்கும் ஒரு சூழ்நிலை இருப்பதையும் நாம் அவதானிக்கின்றோம், அவை இலங்கையில் ஜனநாயக முறையிலான தேர்தலை நடாத்துவதைவிடவும் தமது நலன்களுக்கு சாதகமான ஒரு அரசாங்கத்தை அமைப்பதில் கூடுதல் கவனம் செலுத்துவதும் எமக்குப் புரிகின்றது.

இவ்வாறான நிலையிலும் இலங்கை மக்கள் ஒரு தேர்தலை எதிர்பார்க்கின்றார்கள் ஒரு தேர்தலை நடத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் இதயசுத்தியோடு முன்வருமா என்கின்ற கேள்விகள் இருக்கின்ற நிலையில் அல்லது அது ஜனாதிபதித் தேர்தலா? பாராளுமன்றத் தேர்தலா? உள்ளூராட்சித் தேர்தல்களா? என்கின்ற தெளிவற்ற நிலையிலும் மக்கள் ஒரு தேர்தலை எதிர்பார்க்கின்றார்கள்.

எனவே மேற்படி சூழ்நிலைகள் அனைத்தையும் கருத்தில்கொண்டு இலங்கையில் ஒரு நல்லாட்சி முறைமையொன்று நிறுவப்படுதல் வேண்டும் என்பதில் இலங்கை முஸ்லிம் மக்கள் மிகுந்த கரிசனையோடு இருக்கின்றார்கள். அவ்வாறான ஒரு ஆட்சி அமைகின்ற சந்தர்ப்பத்தில் அந்த ஆட்சியை அமைக்க முன்வருகின்றவர்களிடம் இலங்கை முஸ்லிம் மக்கள் பின்வரும் எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கின்றார்கள்.

1. இலங்கை முஸ்லிம் மக்களும் இலங்கை மக்கள் இலங்கை நாடு அவர்களது பூர்வீக வாழிடம் என்பது நடைமுறை ரீதியாக உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

2. இலங்கை மக்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என்ற பொது நிலைமை இலங்கையின் அனைத்து மட்டங்களிலும் நடைமுறைரீதியாக உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

3. இலங்கை மக்கள் எவரும் இன, மதம், மொழி,பிரதேசம், ஏனைய இனத்துவ அடையாளங்களின் அடிப்படையில் பாகுபாடுகளுக்கோ புறக்கணிப்புகளுக்கோ எந்த மட்டத்திலேனும் உட்படுத்தப்படக்கூடாது.

4. இலங்கை முஸ்லிம் மக்கள் கடந்த 20வருட காலங்களில் பல்வேறு இனரீதியான தாக்குதல்களுக்கும்,இனரீதியான வன்முறைகளுக்கும் முகம்கொடுத்திருக்கின்றார்கள், இதன்மூலம் அவர்களுக்கு உயிர் , உளரீதியான இழப்புக்கள்,, உடைமைகள், பொருளாதார இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றைக் கருத்தில்கொண்டு மேற்படி இனரீதியான தாக்குதல்கள் வன்முறைகள் குறித்த ஒரு முறையான, விரிவான அரச அங்கீகாரத்துடனான விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

5. ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் கிறிஸ்த்தவ சமூகத்தவர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்டாலும் அதன் பின்னரான சூழ்நிலைகளில் முஸ்லிம் மக்கள் வெகுவான நீண்டகாலப் பாதிப்புக்களை எதிர்நோக்கினார்கள், எனவே ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் குறித்து முழுமையான விசாரணைகள் நடாத்தப்பட்டு இதன் பின்புலத்தில் இருக்கின்றவர்கள் சட்டத்தின் முன் முழுமையாக நிறுத்தப்பட்டு உரிய தண்டனைகள் பெற்றுக்கொடுக்கப்படுத்தல் வேண்டும் என்பதோடு இதன்மூலம் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் நீதி வழங்கப்படுதல் வேண்டும்.

6. இலங்கை முஸ்லிம் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த காணிகள், விவசாய நிலங்கள், வர்த்தக நிலையங்கள், வணக்கஸ்தலங்கள், பொதுக்காணிகள் கடந்த 20 வருடங்களாக அரசாங்கத்தினால், அரச நிறுவனங்களினால், தனியாரினாலும் பலவந்தமாக அபகரிக்கப்பட்டிருக்கின்றன இதைக்குறித்து முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவை மீளவும் அதன் உண்மையான உரிமையாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும்.

7. இலங்கையின் கடந்த 20வருட கால அரசியல் செயற்பாடுகளில் ஆட்சியதிகாரத்தில் இருந்த ஆளும்தரப்பினரால் பல்வேறு முறைகேடுகள், ஊழல்மோசடிகள், பொருளாதார விரயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன இவற்றில் ஈடுபட்ட அனைத்து அரசியல்வாதிகள் விடயத்திலும் முறையான விசாரணைகளும் சட்ட நடவடிக்கைகளும் உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

8. இலங்கை மக்களுக்கு நலன்தரும்விதமாக நீதி, கல்வி, சுகாதார, சமூக, பொருளாதார,அபிவிருத்தி, , விவசாய, கடல்தொழில், பெருந்தோட்டத்துறை, கணியவளங்கள், விளையாட்டு கலை கலாசார, பெண்கள் சிறுவர் நலன்கள், வெளியுறவுக்கொள்கைகள், பாதுகாப்பு, , தொழிநுட்பம், தகவல் தொழில்நுட்பம், ஊடகம், போன்ற அனைத்து அம்சங்களிலும் முறைப்படியான மறுசீரமைப்புகள் முன்னெடுக்கப்படுத்தல் வேண்டும்.

9. இலங்கையில் முறையான அதிகாரப்பரவலாக்கம், மற்றும் அதிகாரப்பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டு மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் வினைத்திறனுடன்கூடியதாக செயற்படுவதனை உறுதி செய்தல் வேண்டும்.

10. ஒவ்வொரு நாட்டிலும், அங்கு வாழும் சிறுபான்மையினருக்கு தனியார் சட்டங்கள் போன்ற தனி சட்டங்கள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. இலங்கையில் முஸ்லிம்களுக்கும் தனியான தனிப்பட்ட சட்டங்கள் உள்ளன, அவை செம்மைப்படுத்தப்பட வேண்டும். எனினும் அவை முஸ்லிம் சமூகத்தின் பூரண பங்களிப்புடன் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

11. இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் மற்றும் தவறான புரிதல்களைத் தீர்ப்பதற்கான நல்லிணக்கப் பொறிமுறையொன்று முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இலங்கை மக்கள் மத்தியில் சமாதானமும் சகவாழ்வும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

12. அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடக தளங்கள் இரண்டையும் மேற்பார்வையிடுவதற்கான ஒழுங்குமுறை நடவடிக்கைகளை நாம் செயல்படுத்த வேண்டும், அவை இன பதட்டங்களைத் தூண்டுவதையோ அல்லது இன வெறுப்பை ஊக்குவிப்பதையோ தவிர்ப்பதை உறுதி செய்ய வேண்டும். அதேபோல், வெறுப்பைத் தூண்டுவதற்கும் வன்முறையைத் தூண்டுவதற்கும் பதிலாக, இன நல்லிணக்கம் மற்றும் சமூகங்களுக்கிடையில் அமைதியை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட மத நிறுவனங்களுக்கு ஒழுங்குமுறை நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

SLMEC- Sri Lanka Muslim Expatriates' Council என்பது கனடாவில் அமைந்துள்ள இலங்கை முஸ்லிம் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு முக்கிய செயலணியாகும் மனித உரிமைகளை பாதுகாத்தல், மேம்படுத்தல், நல்லாட்சி, ஊழலற்ற நடைமுறைகள் மற்றும் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை உறுதிசெய்தல் இனங்களுக்கிடையிலான சகவாழ்வை உறுதிசெய்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் அவை தொடர்பான மதிப்பீடுகளை முன்னெடுத்தல் போன்றன எங்கள் செயற்பாட்டு நோக்கங்களாகும். இலங்கைச் மக்களின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக நாங்கள் உழைக்கின்றோம்.

எமது கொள்கைகளுடன் இணைந்து, வளர்ந்து வரும் சக்தி என்ற வகையில், இலங்கையை நல்லாட்சியை நோக்கி வழிநடத்தும் ஆற்றலை தேசிய மக்கள் கட்சி கொண்டுள்ளது என்று நாங்கள் நம்புகிறோம்.

---

## பள்ளிவாசல்கள்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொருவருக்கும் உள்ளது என்ற பணிவும், நேர்மையும், அச்சமும் கலந்த அவ்வுபந்நியாசம்

தலைமைத்துவத்தை தட்டிப் பறித்து, அதில் குளிர்காய நினைக்கும் இக்கால நுனிப்புல் மேயும் மேதாவிகளுக்கு நல்ல படிப்பினையாக அமையும் என நம்பலாம்.

இது மட்டா? இரண்டாம் கலீபரசர் உமர் (ரழி) அவர்கள் கலீபா பதவியை ஏற்றதன் பின் பஞ்சணை மெத்தையில் படாடோப இன்பலோகத்தில் சஞ்சரித்த சரித்திரம் அறவே கிடையாது. மாறாக, அண்டை போட்ட ஆடை அணிந்து அர்த்த ராத்திரி, காலை, பகல் என்று பாராது பொதுமக்களின் இன்ப துன்பங்களில் இரண்டறக் கலந்து, மூட்டை சுமந்த முடி மன்னர் எனும் மேதா விலாசத்துடன், இவர்கள் பெயரைக் கேட்டாலே உலகம் நடுங்கக் கூடிய உத்தம புருஷர்களாக வாழ்ந்து, வழிகாட்டிச் சென்ற வரலாறு காலத்தால் அழியாதது.

இதனால் தான் அந்நிய மதம் சார்ந்த இந்திய சுதந்திரத்தின் தந்தை என விதந்துரைக்கப்படும் மகாத்மா காந்தி கூட ஒரு முறை "உலகம் எதிர்பார்க்கும் சாந்தி, சமாதான ஜனநாயக விழுமியங்கள் நிலைபெற்று நீடிக்க வேண்டுமானால், ஹஸ்ரத் உமர் (ரழி) அவர்களின் ஆட்சியைப் பின்பற்றப்படும்" என விதந்துரைத்திருப்பதானது இக்கால தலைமைத்துவத்தை குறுக்கு வழியில் இலேசாகப் பெற ஆலாய்ப் பறக்கும் அறிவிலிகள் தங்களின் மேலான கவனத்தில் கொள்ளட்டும்.

நமது முன்னோர் அரங்கேற்றிச் சென்ற தலைமைத்துவ ஆன்மீக வழிகாட்டல் விழுமியங்கள் காலக்கிரமத்தில் ஒரு சிலரின் சுயநலச் சேற்றில் புதையுண்டு போக விடுவதென்பது இது ஒரு சமூகத்தின் சாபக்கேடாகும். சபைக்குள் எழுகின்ற சந்தேகங்களை, கருத்து மோதல்களை இனம் கண்டு இஜ்மாஃ, கியாஸ் என்ற நெம்புகோலால் தீர்ப்பு வழங்கக்கூடிய ஆற்றலும், வல்லமையும் கற்றறிந்த உலமாப் பெருந்தகைகளால் தான் அது சாத்தியப்படும். தலைமைத்துவத்துக்கு கட்டுப்படுதல் பற்றி, அண்ணல் நபியவர்கள் ஒரு முறை கூறும்போது, "உங்கள் தலைவர் ஆபிரிக்க தேசத்து, கறுத்த நீக்ரோ அடிமையாக இருந்த போதும், அவரின் ஆணைக்கு அடிபணிந்து, நடத்தல் நம் ஒவ்வொருவரினும் தலையாய கடமையாகும்" என்பதில் இருந்த தலைமை என்கின்ற ஸ்தானம் எவ்வளவு உயர்வானதென்று புரிகிறதல்லவா...?

நிர்வாக கட்டமைப்பிற்குள் பள்ளிவாசல்களின் வகிபாகம்

பள்ளிவாசல்களைப் பராமரிப்பவர்கள் அவர்களை வழிநடத்தும் தலைமைத்துவப் பண்பு, தகைமைகள் எவ்வாறிருக்கும் என்பதை அல்குர்ஆன், அல் ஹதீஸ் சத்திய சஹாபாக்களாகிய முன்னோர்களின் வழிகாட்டில் ஒளியில் சிறிது உரசிப் பார்த்த நமக்கு, அதன் கருவாய் அமைந்த பள்ளிவாசல்கள் பற்றியும், அதன் அருமை, பெருமை பற்றியும் அலசுதல் அவசியமானதாகும்.

உலகிற்கோர் அருட்பிளம்பாய் அவதரித்த உத்தம நபியின் சத்தியவாக்கை, ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் வாயிலாக தப்ராணி என்னும் கிரந்தத்தில் இவ்வாறு பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பூமியில் அல்லா/ஹத்தஆலாவின் வீடுகள் மஸ்ஜிதுகள். பூமியில் இருப்போருக்கு நட்சத்திரங்கள் மின்னுவது போல, வானில் உள்ளோருக்கு பள்ளிகள் மின்னுகின்றன என்றும், மேலும் ஹஜ்ரத் அபு /ஹரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், "நீங்கள் சுவர்க்கத்துப் பூங்காவைக் கண்டால் நன்றாக மேய்ந்து கொள்ளுங்கள்" என்று ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறிய போது, "இறைத்தூதர் அவர்களே! சொர்க்கத்துப் பூங்காவனம் என்றால் என்ன?" என்று நான் கேட்டேன். அதற்கவர்கள், "பள்ளிவாசல்கள்" எனப் பதிலளித்தார்கள். "மீண்டும் மேய்தல் என்றால் என்ன?" என்று நான் வினவிய போது, சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், லாயிலாஹ இல்லல்லாஹ், அல்லா/ஹ அக்பர் என்று திக்ர் என்கின்ற தியானத்தில் ஈடுபடுவதுமாகும்" என ரசூல் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்.

இதற்கும் மேலாக, அல்லாஹ்வை நினைவு கூரக்கூடிய பள்ளிவாசலொன்றை எவரொருவர் கட்டுவாரோ, அவருக்காக அல்லாஹ் சுவனத்தில் மாளிகை ஒன்றைக் கட்டுகிறான் என்னும் சுப செய்தியையும் அறிகிறோம். எவ்வளவோ மகத்துவமும், கண்ணியமும் பொருந்தியதாக பள்ளிவாசல்கள் இருக்கும்பொழுது, அதனை நிர்வாகம் செய்யக்கூடிய நிர்வாகஸ்தர்கள் எவ்வாறிருக்க வேண்டும் என்பதை நமது மனசாட்சியின் தராசில் போட்டு நிறுத்திப் பார்த்தால் அதன் உண்மை புரியவரும்.

இது பற்றி தெளிவூட்ட வந்த அல்குர்ஆன், எம்மைப் பார்த்து அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறது இப்படி, "நீங்கள் ஒவ்வொருவரும் மேய்ப்பாளர்கள். (நிர்வாகிகள்) உங்கள் மெய்ப்பைப் பற்றி நாளை மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள்" என்ற இஸ்லாமிய கண்ணோட்டத்திற்கு அன்றைய நம் முன்னோர்கள் பயந்து, இதிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்கள். காரணம் ஏதாவது இதன் மூலம் தவறுகள் நேர்ந்து அல்லாஹ் தன்னை தண்டித்துக் கொள்வானோ என்ற பயம், அச்சம் அவர்களுக்கிருந்தது.

ஆனால், இன்று நடப்பதென்ன? தகைமை எப்படியிருந்தாலும் அதைப்பற்றி கொஞ்சமும் சிந்திப்பதில்லை. அநேகமாக ஜம்ஆ, தைக்காப் பள்ளிவாசல்களில் நிர்வாகக் குளறுபடிகளும், தான்தோன்றித்தனமான செயற்பாடுகளும், கோஷ்டி மோதல்களும் அன்றாடம் நடப்பதை அவதானிக்கின்றோம். இது எப்படி இருக்கிறதென்றால், கொல்லன் கையில் தங்கத்தையும் தட்டான் கையில் இரும்பையும் வழங்கும் தலைகீழான செயற்பாடு மாறாதவரை நல்லவர்கள், வல்லவர்கள் கௌரவத்துக்குப் பயந்து ஓடி ஒழியாமல் வேறு என்னதான் அவர்களால் செய்ய இயலும்? இந்த நிலை முற்றாக களைந்தெரியப்பட வேண்டும். இதற்கு அனைத்து மஹல்லாவாசிகளிலும் உள்ள புத்திஜீவிகள், உலமாக்கள், படித்தவர்கள், கலைஞர்கள், சமூகப்பற்றாளர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து, தீர ஆராய்ந்து, நல்லவர்கள் என இனம் கண்ட நபர்களை நேரில் சென்று, அழுத்தம் கொடுத்து, இப்படியான புனிதம் நிறைந்த அல்லாஹ்வின் இல்லமாகிய பள்ளிவாசல்களின் பராமரிப்பாளர்களாக, மரைக்காயர்களாக இணைப்பதற்கு பிரதேச வாதம், முடக்குவாதம் அது இது என்ற குறுகிய சிந்தனைக்குள் மூழ்கி விடாமல் சமூகம் போதை என்ற புற்றுநோய் பீடித்திருக்கும் இக்காலகட்டத்தில் மிக மிக விழிப்போடும், அவதானமாகச் செயற்பட வேண்டும்.

புனிதத் தலங்களை பொழுது போக்குமிடமாகவும், அரசியல் அடாவடித்தனத்துக்கு கரம் கோர்க்கும் காரியாலயமாகவும் இல்லாமல் சமூக ஊழல்களுக்கு சாவு மணி அடித்து, சன்மார்க்க நெறி வளர்த்து, நாட்டுப்பற்றோடும், ஏனைய சகோதர பெரும்பான்மை இனங்களை அன்பால் அரவணைத்து, ஒன்றித்து உதவிக்கரம் நீட்டும் உத்தமர்களை, சத்தியத்தின் காவலர்களாக, சன்மார்க்கப் போதகர்களாக வளர்த்தெடுக்கும் ஆன்மீகப் பணியில் தூய சிந்தனையோடு செயலாற்றக்கூடியவர்களை ஜம்ஆ, தைக்கியாக்களில் அவற்றின் நிர்வாகிகளாக பொறுக்கி எடுத்து புடம் போடச் செய்வது சமூகத்தில் உள்ள சகலரினதும் தார்மீகக் கடமையாகும்.



ஏ.எச்.ஏ.ஹுஸைன்

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர்-19 )

"இங்கே போதனைகளைப் பின்தொடர வரும் ஆட்களின் எண்ணிக்கை சுனாமி கடற் பேரலைத் தாக்கத்திற்குப் பின்னர் அதிகரித்தது. அதனால் இடவசதி போதாமல் இருந்த படியால் கட்டிட வசதி தேவைப்பட்டது. வகுப்புக்கள் மத்திய கிழக்கு நாடுகளில் அறபு மொழியிலும் நடக்கின்றன.

இதனைப் பின்பற்றுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஹிந்துக்கள். எங்களது அங்கத்தவர் களை நாங்கள் சகோதர சகோதரிகள் என்றே அழைப்போம்."

தெளிவான நல்ல சிந்தனைக்கு உதாரணமாக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை வழிமுறையொன்றை முன்னுதா ரணமாகக் காட்டி பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்திற்கு வந்திருந்த ஊடகவியலாளர்களின் சிந்தனையை அவர் தட்டி விட்டார்.

"வழமையான அதிகாலைத் தொழுகைக்குச் செல்லும்பொழுது அறியாமை கலந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக தினமும் தலைமேல் கழிவுகளைக் கொட்டிய மூதாட்டி ஒரு நாள் அவ்வாறு செய்யாததால் அத்துடன் இதற்குப் பொறுப்பாக இருந்த தலைமைக்கணக்காளர் தருமலிங்கம் இது ஒரு பாரதூரமான விடயமாக இல்லை என்று சொன்னார். இந்த இடத்தில் ஏற்கெனவே வசித்தவர்களுக்கு மாற்றுக்காணி வழங்கப்பட்டுவிட்டது. அதற்குரிய ஆவணங்களும் உண்டு.

அந்த ஆவணங்களை கோவைப் படுத்திய தலைமை லிகிதரும் எங்களது பிரம்ம குமாரிகள் அமைப்பின் உறுப்பினராக இருந்தவர்தான். அவர் பிரதேச செயலகத்தில் பணியாற்றியவர். அவரிடம்தான் இந்த இடத்தில் முன்பு வசித்தவர்கள் கடிதம் எழுதிக் கொடுத்து ஏற்கெனவே இங்கிருந்த பள்ளிவாசல் நிர்வாகம்தான் அங்கேயும் போய் இருக்கிறார்கள் அதே நிர்வாகத்திடமும் கடிதம் வாங்கி இதையெல்லாம் அவர்தான் செய்தவர். அவரும் பிரம்ம குமாரிகள் அமைப்பின் நிலையத்தின் உறுப்பினர். இப்பொழுது அவர் யாழ்ப்பாணத்திற்குப் போய் விட்டார். உங்களது ஆவணங்கள் எல்லாம் சரியானது ஆனால் அரசியல் தலையீடுகள் இருக்கலாம் ஆனால் நீங்கள் பயப்படத் தேவையில்லை என்று அவரும் உறுதிபடச் சொன்னார். சட்ட ரீதியாக அணுகினால் பயப்படத் தேவையில்லை என்றுதான் அவரும் சொன்னார்.

எங்களுக்கு சமுதாய மட்டத்திலிருந்து பெரிய எதிர்ப்புக் கிளம்பவில்லை. ஏனென்றால், குழாய்க்கிணறு அமைத்ததிலிருந்து அநேக வேலைகளைச் செய்தது எல்லாம் முஸ்லிம்களும் சிங்களவர்களும்தான். ஏறாவூரிலிருந்தும் நிலையத்தின் ஆன்மீகப்பணிகள் சம்பந்தமாக தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஒரு பொருட்காட்சி நடத்தினோம் அதில் கலந்து



# பள்ளிவாசல் காணியை கேட்கவும் இல்லை அபகரிக்கவும் இல்ல

## பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கே. சுரேஸ்.




பிரதேச செயலாளரிடம் சென்று அரச காணியொன்றைப் பெற்றுத்தருமாறு கேட்டோம். நாங்கள் கொத்துக்குளத்து மாரியம்மன் கோயிலுக்கு முன்னா லுள்ள பகுதியைத்தான் யோசனை தெரிவித்துக் கேட்டிருந்தோம். பெரிய கட்டிடம் கட்டுவதற்கு அந்த இடத்தைத் தரமுடியாது என அவர் கூறினார். அந்த இடத்தை விட தற்போதைய இந்த இடத்தைத் தெரிவு செய்யுமாறு அவர்கள்தான் எங்களுக்கு ஆலோசனை கூறினார்கள்."

இவ்வாறு பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தின் ஆன்மீகப் பணிகளை விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஏறாவூரைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஏ.எச்.ஏ. ஹுஸைன், பள்ளிவாசல் காணி சம்பந்தான சர்ச்சை குறித்துக் கேட்டபோதே பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கே. சுரேஸ். (33வயது) இந்த விளக்கத்தை அளித்தார். இந்த ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு 2012.01.29 அன்று சர்ச்சைக்குரிய பிரம்மகுமாரிகள் புதிய கட்டிடத் தொகுதி யில் இடம்பெற்றது.

சுரேஸ் கல்முனை – நற்பிட்டி முனையைச் சேர்ந்தவர். தனது 17 வயதில் 2003ஆம் ஆண்டு பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையத் துடன் இணைந்து கொண்டதாகக் கூறுகின்றார். ஏன் அவர் இதில் இணைந்து கொண்டார் என்பதற்கான விளக்கத்தை அவரே கூறுகிறார்.

"சிறு வயதில் சமயச்சடங்குகளில் எனக்கு ஈடுபாடு இருக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் போதிப் பதை நடைமுறையில் கடைப்பிடிப்ப தில்லை. போதனை ஒன்று நடைமுறை வேறொன்றாக இருந்தது

பெண் விடுதலை என்கிறார்கள் ஆனால், அப்படிச் சொல்பவர்கள்தான் பெண்களைக் கொடுமைப்படுத்து வார்கள். எனக்கு நாஸ்திகப் போக்கு என்றில்லை, கடவுள் நம்பிக்கை இருந்தது. ராமகிருஷ்ணரில் ஈடுபாடு இருந்தது.

பிரம்மகுமாரிகள் அமைப்பு பேசும் அளவுக்கு நடைமுறையும் உள்ளது. இந்த அமைப்பு பெண்களுக்கு முன்னுரிமை வழங்கியதும் நான் இந்த இமைப்பில் இணைந்து கொண்டதற்கு ஒரு முக்கிய காரணம். பிரம்மகுமாரிகள் ராஜயோக தியானத்திற்குள் வந்தால் யாரும் தாங்கள் இதுவரைப் பின்பற்றி வரும் மதத்திலிருந்து மாறவேண்டும் என்ற அவசியம் இல்லை. எமது அவருக்கு என்ன ஆயிற்று என விசாரித்தபோது அவர் சுகவீனமுற்றிருப்பதாகச் சொல்லப் பட்டது. அக்கணமே கவலையடைந்த நபிபெருமானார் அவர்கள் மூதாட்டியைச் சென்று பார்த்து அவரது உடல் நலத்திற்காக பிரார்த்தித்தார்கள். நபியவர்களின் மன்னிக்கும் தயாள குணத்தினால் நெகிழ்ந்து போன மூதாட்டி நபி பெருமானாரிடம் மனமுருகி மன்னிப்பு வேண்டி நின்றார். எனவே உத்தம மகான்களின் உயர்ந்த மாண்புகள் இப்படித்தான் இருக்கும். நாமும் இத்தகைய உயரிய குணங்களோடு வாழவேண்டும்" என்றும் சுரேஸ் வேண்டுகோள் விடுத்தார்.

பள்ளிவாசல் இருந்த இடத்தைத்தான் ஆக்கிரமித்து மட்டக்களப்பு பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சுரேஸ் தொடர்ந்து கூறியதாவது,

"இந்த அமைப்புக்கு வெளிநாடுகளிலிருந்து நிதி வருவதில்லை. ஆரம்பத்தில் எமது நிலையத்திற்கு கட்டிட வாடகை கொடுக்கக்கூட பணமில்லாமல் கஷ்டப்பட்டோம். இப்பொழுது இதன் மூலம் நன்மையடைந்தவர்கள் தங்களது வருமானத்தில் ஒரு பகுதியை இந்த அமைப்புக்கு நன்கொடையாக வழங்குகிறார்கள். யாரிடமும் கையேந்தக்கூடாது என்பது எங்களது பொதுவான கொள்கை. யாராவது இதற்கு உதவி செய்ய விரும்பினால் அவர்கள் இந்தப் போதனைகளைக் கற்றுக் கொண்டு நன்மையடைய வேண்டும்.

அப்போது இந்தக் காணியை மூன்று பேர் கையகப்படுத்தி வைத்திருந்தார்கள். அது ஒன்றுதான் எங்களுக்குப் பிரச்சினையாகத் தெரிந்தது. வேறு விவரங்கள் எங்களுக்குத் தெரியாது. இது பிரம்மகுமாரிகள் கட்டிடத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று நாங்கள் மூன்று மாதம் இந்த இடத்தில் அறிவித்தல் பலகை போட்டிருந்தோம். ஆனாலும் அந்த மூன்று மாத காலப்பகுதிக்குள் எமக்கு எந்த விதமான ஆட்சேபனையும் வந்திருக்கவில்லை.
நாங்கள் 16 இலட்ச ரூபாய் செலவு செய்து அத்திவாரம் போட்ட பின்புதான் எதிர்ப்பு வந்தது. அதன்பிறகு எங்களால் எதுவும் செய்ய முடியாது. உறுப்பினராக இருந்தவர். அவர்கள் எல்லோரும் இதைப்பற்றிப் பெரிதாக யோசிக்கத் தேவையில்லை என்றுதான் சொன்னார்கள்.

நாங்கள் சட்டத்தை மீறி எதுவும் செய்யவில்லை. அதனால் எங்களுக்கு மனத் தைரியம் வந்தது. அதே நேரம் எங்களுக்குப் பெரிய எதிர்ப்புக்கள் எதுவும் நேரடியாக வந்திருக்கவில்லை. பிறகு எதிர்ப்புக்கள் வந்தது. அதை நாங்கள் எதிர்கொண்டோம். சட்டத்திற்கு முரணாகப் போனால்தான் நாம் யாருக்கும் பயப்படவேண்டும் நீங்கள் ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை என்று பிரதேச செயலாளர் அம்மணியும் எங்களுக்குத் தைரியம் ஊட்டினார்.

பிரதேச செயலாளர்தான் எங்களது தலைமைக் காரியாலயத்திற்கும் பதில் அனுப்பியிருந்தார்கள். காணி விடயங்கள் நேரடியாக பிரதேச செயலாளருக்குத்தான் பொறுப்பு என்ற விதத்தில் பிரதேச செயலாளர்தான் இந்த விடயத்தில் எங்களுக்கு உறுதியாகவும், உறுதுணையாகவும் இருந்தார். அதேவேளை மேல் நீதி மன்ற நீதிபதி திரு பரமநாதன் அவரும் எங்களது பிரம்ம குமாரிகள் ராஜயோக வேலை செய்தார்கள். காத்தான்குடி முஸ்லிம்களிடமிருந்துதான் சாமான்கள் எல்லாம் கொள்வனவு செய்தோம். ஒரு சிலர்தான் இதனைத்தூண்டிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டோம். நான் அறிந்த வரையில் இங்கே இந்த இடத்தில் முன்னர் குடியிருந்தவர்கள் எதிர்ப்பில்லை.

இப்பொழுது இரண்டு தனி நபர்கள் தான் இந்தப் பிரச்சினையைத் தூ ண்டிக்
கொண்டிருப்பதாகத் தெரிகிறது எங்களுக்கு நேரடியாக எந்த எதிர்ப்பும் வரவில்லை.

நீதிமன்றத்தை நாடி நீதிமன்ற உத்தரவு வந்திருந்தால் எதுவும் செய்ய முடியாமல் அருந்திருக்கும். சட்ட ரீதியாக ஏதாவது இருந்தால் நாங்கள் விட்டுக் கொடுத்திருக்கலாம். இதைவிட நாங்கள் சட்டப்படியான ஆவணங்கள் எதுவுமில்லாமல் பலவந்தமாக ஆக்கிரமிக்கவில்லை. படவரைபு சேவியர் பிளான் சட்டப்படி உள்ளது. முஸ்லிம்களின் இடம் பள்ளிவாசல் இருந்தது என்ற எதிர்ப்பு வந்த பிறகு மாநகர சபை பட வரைபை நிறுத்தி வைத்திருந்தார்கள்.

எமது பிரம்மகுமாரிகள் ராஜயோக கொண்ட 98 சதவீதமானோர் தமிழ் முஸ்லிம்கள். நீங்கள் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை இஸ்லாத்தில் உள்ளதைத்தானே சொல்கிறீர்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அடித்தளம் இட்ட பின்னர் எதிர்ப்பு வந்ததால் ஆரம்பத்தில் ஒரு சங்கடம் இருந்ததுதான். என்றாலும், உண்மைக்கு அழிவில்லை என்பதால் அது கடவுளால் சரிப்படுத்தப்பட்டு விடும்." என்றார் சுரேஸ்.

பிரம்மகுமாரிகள் அமைப்பின் உறுப்பினராகவும் அப்போது வீரகேசரிப் பத்திரிகையின் கொக்கட்டிச்சோலை நிருபராகவும், முன்னர் இந்தப்பகுதியின் கிராம சேவையாளராகவும் இருந்தவர் இன்பராஜன் அவரும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்.
"இங்கே வசித்தவர்களுக்குப் பூநொச்சிமுனையில் காணி கொடுக்கப்பட்டுவிட்டது."
என்று இன்பராஜன் கூறினார்.

(மட்டக்களப்பு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணியில்லாப் பிரச்சினை வரும் வாரமும் வரும்)

# விறுவிறுப்பான இலங்கை மற்றும் பப்புவா நியூ கினியா போட்டி கோலின்றி சமநிலை பெற்றது



அரபாத் பஹர்தீன்

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 4 நாடுகள் பங்கேற்கின்ற நட்பு ரீதியான உதைப்பந்தாட்டத் தொடர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்ற இலங்கை மற்றும் பப்புவா நியூ கினியா அணிகளுக் கிடையிலான போட்டி கோலின்றி சமநிலை பெற்றது

அண்மையில் கட்டாரில் இடம்பெற்ற ஆசியக் கிண்ண ஆரம்ப நிகழ்வில் பின்னர் பிபாவின் தலைவரான கியானி இன்பான்டினோவுக்கும் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரான ஜஸ்வர் உமருக்கும் இடையிலான சந்திப்பில் இத் தொடர் பற்றி பேசப்பட்டு, அதற்கான அனுமதியும் பெறப்பட்டிருந்தது.

அதற்கமைய இலங்கை , மத்திய ஆப்ரிக்கா, பப்புவா நியூ கினியா மற்றும் பூட்டான் ஆகிய 4 அணிகள் இத் தொடரில் பங்கேற்கின்றன. இதில் ஒரு அணி மற்றைய மூன்றில் இரு அணிகளுடன் மோதும் வகையில் அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இத் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (22) கொழும்பு ரேஸ் கோஸ் மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு மத்திய ஆப்ரிக்கா மற்றும் பூட்டான் அணிகளுக்கு இடையில் இடம்பெற்றது. இப் போட்டியில் முழுமையான ஆதிக்கம் செலுத்திய மத்திய ஆபிரிக்க அணி 6.0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் பூட்டான் அணியைப் பந்தாடியது.

அதனைத் தொடர்ந்து அதே மைதானத்தில் இரவு 8.45 மணிக்கு கொழும்பு ரேஸ்கோர்ஸ் மைதானம் ரசிகர்களால் முழுமையாக சூழப்பட இலங்கை மற்றும் பலமிக்க பப்புவா நியூ கினியா அணிகளுக் கிடையிலான போட்டி மிகுந்த விறுவிறுப்பாக ஆரம்பமானது. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் கோலுக்கான முயற்சியில் ஈடுபட்ட போதிலும் அவர்களால் ஒரு கோலைக்கூட உட்செலுத்த முடியவில்லை. இதனால் முதல்பாதி கோலின்றி நிறைவுக்கு வந்தது.

பின்னர் ஆரம்பித்த தீர்மானிக்க 2ஆவது பாதி ஆட்டத்தில் இலங்கை வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். இருப்பினும் பப்புவா நியூ கினியாவின் தடுப்பு வீரர்கள் தம் கோல்கம்பங்களை சிறப்பாக பாதுகாத்து நின்றனர்.

இதனால் இலங்கை முன்கள வீரர்களால் எதிரணி கோல்கம்பங்களுக்கும் நுழைய முடியவில்லை. இறுதி நிமிடத்தில் கூட இலங்கையின் முன்கள வீரரான ஜூட் சுமன் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டிய போதிலும் அது பயனளிக்காமல் போனது. இதனால் போட்டியின் முழு நேர ஆட்டம் முடிவுக்கு வர இரு அணிகளும் கோல் கணக்கை ஆரம்பிக்காமல் போக விறுவிறுப்பான போட்டி கோலின்றி சமநிலை பெற்றது.

மேலும் எதிர்வரும் 25 தனது இறுதி ஆட்டத்தில் இரவு 8.45 மணிக்கு இலங்கை அணி பூட்டான் அணியை எதிர்த்தாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# மியாமி ஓபன் டென்னிஸ்: அதிர்ச்சி தோல்வியுடன் வெளியேறினார் முதல்நிலை வீரர் ஜெக்கோவிச்

(அரபாத் பஹர்தீன்)

உலகப் புகழ்பெற்ற டென்னிஸ் தொடர்களில் ஒன்றான மியாமி டென்னிஸ் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டத்தில் முதல் நிலை வீரரான செர்பியாவின் நெவக் ஜெக்கோவிச் இத்தாலியின் லூகா நார்டியிடன் அதிர்ச்சித் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

விம்பிள்டன் மற்றும் அவுஸ்ட்ரேலியன் ஓபன் டென்னிஸ் தொடர்களுக்கு அடுத்தபடியான புகழ்பெற்ற தொடரான மியாமி ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் கடந்த இரு வாரங்களாக இடம்பெற்று வருகின்றது. இதன் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் டென்னிஸ் உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவின் நெவக் ஜெக்கோவிச் இதுவரை தரப்படுத்திலில் இடம்பெறாத இத்தாலியின் லூகா நார்டியை எதிர்த்தாடினார்.

விறுவிறுப்பாக ஆரம்பமான போட்டியின் முதல் செட் ஆட்டத்தில் முதல் நிலை வீரருக்கு அதிர்ச்சி கொடுத்த லூகா நார்டி 6:4 என தனதாக்கினார். பின்னர் ஆரம்பித்த 2 ஆவது செட்டில் சுதாரித்துக் கொண்ட ஜெக்கோவிச் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 6:3 என வென்றெடுத்தார்.

இதனால் 3ஆவதும் இறுதியுமான செட் ஆட்டம் தீர்மானமிக்கதாய் மாற மீண்டும் தனது வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இளம் வீரரான லூகா நார்டி 6:3 என்ற புள்ளிகள் கணக்கில் தனதாக்கிக் கொண்டதுடன் 6:4, 3:6 மற்றும் 6:3 என்ற செட்கள் அடிப்படையில் உலகின் முதல் நிலை வீரரான நவோக் ஜெக்கோவிச்சை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். இந்த அதிர்ச்சித் தோல்வியுடன் நடப்பாண்டின் மியாமி ஓபன் டென்னிஸ் தொடரிலிருந்து முதல் நிலை வீரரான நவோக் ஜெக்கோவிச் ஏமாற்றத்துடன் வெளியேறினார்.



# ஐசிசி ஒருநாள் தரப்படுத்தல் பெத்தும் நிசங்க முதல் முறையாய் முதல் பத்தில்

(அரபாத் பஹர்தீன்)

சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ள புதிய ஒருநாள் வீரர்களுக்கான தரப்படுத்தலில் இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பெத்தும் நிஸ்ஸங்க மூன்று இடங்கள் முன்னேறி முதல் முறையாக 8 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ஒவ்வொரு தொடர்களின் முடிவிலும் ஐசிசி புதிய தரப்படுத்தலை வெளியிடுவது வழக்கம். அந்தவகையில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் நிறைவடைந்திருக்க அத் தொடரில் ஒரு சதம் அடங்களாக 3 போட்டிகளில் 151 ஓட்டங்களைக் குவித்த இலங்கை அணியின் இளம் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பெதும் நிஸ்ஸங்க, ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான புதிய தரவரிசையில் 3 இடங்கள் முன்னேறி 711 புள்ளிகளுடன் 8ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இதன்படி, ஐசிசி ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதல் தடவையாக அவர் முதல் 10 இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் 3 போட்டிகளில் ஒரு அரைச் சதம் உட்பட 146 ஓட்டங்களைக் குவித்த சரித் அசலங்க இரண்டு இடங்கள் முன்னேறி 681 புள்ளிகளுடன் 14ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அத்துடன் இப்புதிய தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தில் பாகிஸ்தான் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான பாபர் அஸாம் 824 புள்ளிகளுடன் இருப்பது குறிப்பிடத்தக்கது.



# பாக். பயிற்றுவிப்பாளர் பதவிக்கு இரண்டு மில்லியன் டொலர் சம்பளம் ஏற்க மறுத்தார் வாட்சன்




(அரபாத் பஹர்தீன்)

வருடத்திற்கு இரண்டு மில்லியன் டொலர்கள் சம்பளமாக வழங்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இணங்கிய போதிலும் பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் பொறுப்பை ஏற்க அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சகலதுறை வீரரான ஷேன் வாட்சன் மறுத்துள்ளார். இந்த சம்பவம் கிரிக்கெட் உலகில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக முன்னாள் வீரர் ஹபீஸ் செயற்பட்டு வருகிறார். இவரது வழிகாட்டுதலின் கீழ் பாகிஸ்தான் அணி குறிப்பிடத் தகுந்த வெற்றியை பெற்றிருக்க வில்லை. இதனால் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ள ரி20 உலகக்கிண்ண தொடரை கவனத்தில் கொண்டு அணிக்கு புதிய வெளிநாட்டு பயிற்றுவிப்பாளரை நியமிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆர்வம் காட்டி வருகின்றது.

அந்த வகையில் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சகலதுறை வீரரான ஷேன் வாட்சனுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இதற்காக அவர் ஆண்டுக்கு 2 மில்லியன் டாலர்களை சம்பளமாகக் கேட்டிருந்தார். அவ்வளவு பெரிய சம்பளத் தொகையை வழங்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஒப்புக் கொண்டிருந்தது. இருப்பினும் பேச்சுவார்த்தையின் இறுதியில் ஷேன் வாட்சன் அதனை நிராகரித்து கராச்சியிலிருந்து அவுஸ்திரேலியா சென்றார். மேலும் சம்பளத் தொகை குறித்த பேச்சுவார்த்தையை வாட்சன் ரகசியமாக வைத்திருந்ததாகவும், அவை பாகிஸ்தான் ஊடகங்களில் கசிந்ததால் அவர் இவ் ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இருப்பினும் இது குறித்து கருத்து வெளியிட்ட வாட்சன், ”ஐ.பி.எல் தொடரில் வர்ணனையாளர் பணி, யு.எஸ்.ஏ. லீக் போட்டிகள் மற்றும் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட விரும்புவதால் பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் பொறுப்பை தவிர்த்தேன்.” என்றார் ஷேன் வாட்சன்.

# இலங்கை கிரிக்கெட் அதிரடி. செயற்திறன் மையத்துக்கு புதிய பயிற்றுவிப்பாளர்கள் நியமனம்

(அரபாத் பஹர்தீன்)

இலங்கை கிரிக்கெட் அணியின் உயர் செயற்திறன் மையத்துக்கான புதிய பயிற்றுவிப்பாளர்களுக்கான நியமனங்களை இலங்கை கிரிக்கெட் சபை வழங்கியுள்ளது.

அதன்படி இலங்கை கிரிக்கெட் உயர் செயற்திறன் மையத்தின் வேகப்பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக இலங்கை அணியின் முன்னாள் வீரரான அனுஷ சமரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே இலங்கை தேசிய அணியின் வேகப்பந்துவீச்சு பயிற்றுவிப்பாளராக செயற்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அதேநேரம் உயர் செயற்திறன் மையத்தின் விளையாட்டு ஊட்டச்சத்து நிபுணராக ஹஷான் அமரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சிரேஷ்ட ஊட்டச்சத்து பதிவாளராக செயற்பட்டு வந்தவராவார்.

இதேவேளை இம் மையத்தின் புதிய உடல் சிகிச்சை நிபுணராக ஜொனதன் போர்டெர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அவுஸ்திரேலிய தேசிய கிரிக்கெட் அணியின் உடல் சிகிச்சை நிபுணராக செயற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

அத்துடன் ஜொனதன் போர்டெர் மார்ச் முதலாம் திகதியிலிருந்து தன்னுடைய பணியை ஆரம்பித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.



இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.